விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 01 வெள்ளிக்கிழமை (17.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210

SATS-TECH ENGINEERS (PVT) LTD
0114562929, 0212228812, 0212225908




1 Year Subcription free with All Tamil + All sports Including Setmax, Pogo,Cartoon network BBC,CNN

# வீரவன்ச-ஹெல உறுமய உள்ளவரை தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்காது!

## ஐ.தே.க. யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜாதிக ஹெல உறுமய கட்சியும் விமல் வீரவன்சவின் அணியும் அரசுடன் இணைந்திருக்கும் வரை தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்காது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி யாழ்.மாநகர சபைத் தேர்தலில் பிரசார நடவடிக்கையை ஆரம்பித்து வைப்பதற்காக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)



யாழில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா, பிரதம வேட்பாளர் சத்தியேந்திரா ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை வெகு விரைவில் மீளக் குடியேற்றுவேன்

### எகிப்தில் ஜனாதிபதி உறுதி

(கெய்ரோ)

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களை வெகு விரைவில் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றி அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பதே நமது நோக்கமாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

118 நாடுகள் அங்கம் வகிக்கும் அணிசேரா நாடுகளின் 15-து உச்சிமாநாடு எகிப்தின் ஷரம் அல் ஷேக் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி (13ஆம் பக்கம் பார்க்க)




## ஐ.நா. செயலருடன் ஜனாதிபதி சந்திப்பு

ஐ. நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கும் ஜனாதிபதி மகிந்தவுக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. எகிப்தில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டின் பின்னர் இச் சந்திப்பு நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் தங்கியிருக்கும் முகாம்களின் தற்போதைய நிலைமை மற்றும் இடம்பெயர்ந்திருக்கும் மக்களை மீள் குடியேற்றுவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## முகாம் தொடர்பான விமர்சனங்களை தொண்டு நிறுவனங்கள் வெளியிடுவதில்லை

### த நியூயோர்க் ரைம்ஸ் குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

அரசாங்கத்தின் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டுவிடும் என்ற சந்தேகத்திலேயே அரசாங்கம் இடைத்தங்கல் முகாம்களுக்குள் யாரையும் அனுமதிப்பதில்லை என த நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன் தமிழர்களுக்காக பணியாற்றி வருகின்ற சில தொண்டு நிறுவனங்களும், அரசாங்கத்தினால் தாம் வெளியேற்றப்பட்டுவிடலாம் என்ற அச்சத்தில் முகாம்கள் தொடர்பில் விமர்சனங் (14ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதம் அற்ற நாட்டில் சிந்திக்கும் உரிமை சகலருக்குமுண்டு

(கொழும்பு)

### அரசாங்கம் கூறுகிறது

பயங்கரவாதத்திலிருந்து நாடு விடுதலை பெற்றுள்ள இச் சந்தர்ப்பத்தில் இந் நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் தமது எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் உரிமை தற்போது கிடைத்துள்ளதாக தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்டத்தின் பிபிலை நகரில் நேற்று காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். ஊவா மாகாணத்தில் துரித அபிவிருத்தி பணிகளை மேற் கொள்ள அரசாங்கம் உரியநடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் அங்கு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஐ.ம.சு. (14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

✷ தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆடி மாதப்பலன்கள்.

✷ க.பொ.த. உ/த பரீட்சை -2009 நேர அட்டவணை

### ஏ-9 பாதை பயணிகள் போக்குவரத்துக்கு விரைவில் திறப்பு

## வீதியின் அபிவிருத்திப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்

(வவுனியா)

ஏ-9 வீதி ஓரிரு வாரங்களில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகளை நேரில் பார்வையிடுவதற்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சின் உயரதிகாரிகள் மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சகிதம் யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாக வவுனியாவிற்கு (13ஆம் பக்கம் பார்க்க)

இடமாற்றம்...! த. சாரிக்கா லேனர்ஸ்

கந்தப்பசேகர வீதியில் இருந்து 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் முன்பாக) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.



7ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு 15.07.2009 -30.08.2009 வரைக்கும் அதிரடி ஆடிக் கழிவு 1000 ரூபா.
அதி சிறந்த முறையிலான வாகனப் பயிற்சி, மிகவும் விளக்கமான முறையில் வகுப்புகள், பரீட்சைகள் திருப்தியான முறையில் செய்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.



நிர்வாகி: திரு. போல் பொணிபஸ் (சாரதிப் பயிற்சியாளர்) T.P 077 6140361

(2834)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை-2009

### 2009 ஆகஸ்ட் 11 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் நேர அட்டவணை

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| ஆகஸ்ட் 11 செவ்வாய்க்கிழமை | |
| 08 30-11 30<br>இணைந்த கணிதம் I | 12 30-14 30<br>உயிரியல் I;<br>12 30-15 30 பொருளியல்I;<br>பகுதி I;II |
| ஆகஸ்ட் 12 புதன்கிழமை | |
| உயிரியல் II;பொருளியல் II | நாட்டியம்-பரதம் I<br>சங்கீதம் - கீழைத்தேயம் I<br>சங்கீதம் - கர்நாடகம் I<br>சங்கீதம் - மேலைத்தேயம் I |
| ஆகஸ்ட் 13 வியாழக்கிழமை | |
| இணைந்த கணிதம் II<br>நாட்டியம் - பரதம் II | விவசாய விஞ்ஞானம் I<br>கிரேக்க உரோம நாகரிகம் I |
| ஆகஸ்ட் 14 வெள்ளிக்கிழமை | |
| கணக்கீடு I;பகுதி I;II<br>சித்திரம் I<br>நாட்டியம் - பரதம் II | கிரேக்க உரோம நாகரிகம் II<br>சங்கீதம் கீழைத்தேயம் II<br>சங்கீதம்-கர்நாடகம் II<br>சங்கீதம்-மேலைத்தேயம் II |
| ஆகஸ்ட் 15 சனிக்கிழமை | |
| பௌதிகவியல் I;கணக்கீடு II<br>சித்திரம் II | விவசாய விஞ்ஞானம் II |
| ஆகஸ்ட் 17 திங்கட்கிழமை | |
| பௌதிகவியல் II;சித்திரம் III | அளவையியலும் விஞ்ஞான முறையும் I |
| ஆகஸ்ட் 18 செவ்வாய்க்கிழமை | |
| சிங்களம் I;தமிழ் I | மனைப்பொருளியல் I |
| ஆகஸ்ட் 19 புதன்கிழமை | |
| சிங்களம II;தமிழ் II | மனைப்பொருளியல் II |
| ஆகஸ்ட் 20 வியாழக்கிழமை | |
| இரசாயனவியல் I | அளவையியலும்<br>விஞ்ஞானமுறையும் II |
| ஆகஸ்ட் 21 வெள்ளிக்கிழமை | |
| இரசாயனவியல் II | வணிகக்கல்வி I பகுதி I;II |
| ஆகஸ்ட் 22 சனிக்கிழமை | |
| பொது ஆங்கிலம் I | பொது ஆங்கிலம் II |
| ஆகஸ்ட் 24 திங்கட்கிழமை | |
| குடிசார் தொழில்நுட்பவியல் I;<br>பொறிமுறைத்<br>தொழில்நுட்பவியல் I;<br>இலத்திரன் ; தகவல்<br>தொழில்நுட்பவியல் I;<br>உணவுத்<br>தொழில்நுட்பவியல் I;<br>விவசாயத் தொழில்நுட்ப<br>வியல் I;இந்து நாகரிகம் I;<br>இஸ்லாமிய நாகரிகம் I | வரலாறு II(இந்திய)<br>பகுதி I;II<br>வரலாறு II(ஐரோப்பிய)<br>பகுதி I;II |
| ஆகஸ்ட் 25 செவ்வாய்க்கிழமை | |
| வரலாறு I பகுதி I;II | ஆங்கிலம் I |
| ஆகஸ்ட் 26 புதன்கிழமை | |
| பௌத்த நாகரிகம் I | வணிகக்கல்வி IIபகுதி I;II |
| ஆகஸ்ட் 27 வியாழக்கிழமை | |
| குடிசார் தொழில்நுட்பவியல் II;<br>பொறிமுறைத்தொழில்நுட்பவியல் II;<br>இலத்திரன் ; தகவல்<br>தொழில்நுட்பவியல் II;உணவுத்<br>தொழில்நுட்பவியல் II;<br>விவசாயத்தொழில்நுட்பவியல் II;<br>இந்து நாகரிகம் II;<br>இஸ்லாமிய நாகரிகம் II | புவியியல் I |
| ஆகஸ்ட 28 வெள்ளிக்கிழமை | |
| கணிதம் I ;உயர் கணிதம் I | புவியியல் II பகுதி I;II |
| ஆகஸ்ட் 29 சனிக்கிழமை | |
| பொதுச்சாதாரண பரீட்சை | புவியியல் III பகுதி I;II |
| ஆகஸ்ட் 31 திங்கட்கிழமை | |
| கணிதம் II ;உயர் கணிதம் II | பௌத்த நாகரிகம்II |
| செப்ரெம்பர் 01 செவ்வாய்க்கிழமை | |
| அரசியல் மூல தத்துவங்கள் I<br>பகுதி I;II | ஆங்கிலம் II |
| செப்ரெம்பர் 02 புதன்கிழமை | |
| அரசியல் மூல தத்துவங்கள் II<br>பகுதி I;II | நாடகமும் அரங்கியலும் I |
| செப்ரெம்பர் 03வியாழக்கிழமை | |
| வணிகப்புள்ளி விபரவியல் I<br>நாடகமும் அரங்கியலும் II | இந்து சமயம் I, கிறிஸ்தவம் I ,<br>இஸ்லாம் I |
| செப்ரெம்பர் 05சனிக்கிழமை | |
| வணிகப்புள்ளி விபரவியல் II<br>நாடகமும் அரங்கியலும் III | இந்து சமயம் II , கிறிஸ்தவம்II ,<br>இஸ்லாம் II |

## கல்வித்தினம்

(உசன்)

உசன் இராமநாதன் மகா வித்தியாலய மொழித்தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் சி.மனோகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) க. சின்னத்துரை, தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) வே. ஸ்ரீதரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-3)

## கிறிஸ்தவ பாட மீட்டல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் நடத்தப்படும் க.பொ.த. (உ.த) கிறிஸ்தவ பாடநெறிக்கான மீட்டல் ஆயத்த வகுப்புக்கள் எதிர்வரும் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை அகவெளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வருடம் கிறிஸ்தவ பாடநெறிக்கு தோற்றும் மாணவர் களை கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ச-3)

## பிரபல கர்நாடக இசைக் கலைஞர் டி.கே. பட்டம்மாள் காலமானார்



(சென்னை)

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் டி.கே.பட்டம்மாள் இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 90. சிறிது காலமாக உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வந்தார் பட்டம்மாள். தாமல் கிருஷ்ணசாமி பட்டம்மாள் என்கின்ற டி.கே. பட்டம்மாள் பிறந்தது காஞ்சி புரம் நகரில். இவரது தந்தை பெயர் தாமல் கிருஷ்ணசாமி தீக்ஷிதர். பட்டம்மாளின் தாயார் காந்திமதி என்ற ராஜம்மாவும் ஒரு கர்நாடகப் பாடகியே.

மிகப் பெரிய பாடகி என்றாலும் பட்டம் மாள் முறையாக சங்கீதம் கற்கவில்லை. கச்சேரிகளில் பாடல்களைக் கேட்டே தன் திறமையை வளர்த்துக் கொண்டார். சுயம்புவாக சங்கீதத்தில் பாண்டித்தியம் பெற்றவர் பட்டம்மாள்.

கிட்டத்தக்க 65 ஆண்டுகள் கர்நாடக இசையில் கொடி கட்டிப் பறந்தார். இவரது சம கால கலைஞர்களான எம்.எஸ். சுப்புலட்சுமி மற்றும் எம்.எல். வசந்தகுமாரிக்கு மிகச் சிறந்த போட்டியாளராகத் திகழ்ந்தார் பட்டம்மாள்.

அன்றைக்கு இந்த மூவரும் சங்கீத பெண் மும்மூர்த்திகளாக போற்றப்பட்டார்கள். அமெரிக்கா , ஜெர்மனி, பிரிட்டன் என உலக நாடுகள் பலவற்றிலும் கச்சேரிகள் நடத்தி யவர் பட்டம்மாள். பல திரைப் படங்களில் பின்னணியும் பாடியுள்ளார். கமலஹசனின் 'ஹே ராம்' படத்தில் வைஷ்ணவ ஜனதோ பாடலை பாடியுள்ளார் பட்டம்மாள்.

இந்திய அரசின் பத்ம பூஷண் மற்றும் பத்ம விபூஷண் விருதுகளையும் சங்கீத நாடக அக்கடமி விருது , சங்கீத சாகர ரத்னா விருது , மற்றும் சங்கீத கலாநிதி விருதினையும் பெற் றவர் பட்டம்மாள். இவரது சகோதரர் டி.கே. ஜெயராமனும் மிகப் பெரிய கர்நாடக இசைக் கலைஞர். பாடகி நித்யஸ்ரீ மகாதேவன் இவருக்கு பேர்த்தி முறையாவார். (ச-5)

## யாழ்ப்பாணம், மாநகரசபை பகிரங்க ஏலம் கோரல் - 2009.

கீழே காட்டப்பட்டுள்ள சந்தைகளை 01.08.2009ம் திகதி தொடக்கம் 31.12.2009ம் திகதி வரையான காலத்திற்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூ 400.00
(வற் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீங்கலாக)
கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி -28.07.2009, மு.ப. 10.00 மணி வரை
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் -28.07.2009, நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் -28.07.2009, பிற்பகல் 2.00 மணி

| தொ.இல | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% வற்வரி, 3% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பாசையூர் சந்தை | 2000.00 | 10000.00 |
| 02 | அரியாலைச் சந்தை | 1000.00 | 5000.00 |

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் சந்தையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை , யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 28.07.2009ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு :

1) கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒருவங்கியின் முறிஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

2) சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) ரூபா 40.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக் கூடாது.

3) கேள்விப் படிவக் கட்டணம் , கேள்வித் தொகை , மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரி (வற்) யுடன் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 3% உம் செலுத்துதல் வேண்டும்.

4) சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/2 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/2 பங்கை 2009 ஆகஸ்ட் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.

5) கேள்வி விண்ணப்பப் பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.

6) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ் மாநகர சபை ஆணையாளராகிய எனக்கு இருக்கிறது.

7) கேள்விப் படிவங்கள் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் யாழ் மாநகர சபையின் நனாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்
யாழ்ப்பாணம்
14.07.2009

(C-2825)

மு.செ. சரவணபவ
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

# இன்று ஒரு தகவல்

## புகைப்பழக்கம்

ஒருவர் சிகரெட்டும் கையுமாக வந்தார்.

"சேர்... இந்த புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தி விடவேண்டும் என்றுதான் பார்க்கிறேன். முடிய வில்லை" என்றார்.

"புகைப்பிடிப்பதை நிறுத்துவது மிகவும் சுலபம் சேர்..." என்றார் இன்னொருவர்.

"எப்படிச் சொல்றீங்க?" என்று கேட்டார் அவர்.

"நான் கூட பத்துத்தடவை அந்தப் பழக்கத்தை நிறுத்தியிருக்கிறேன் சேர்" என்றார் இவர்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

புகைப்பழக்கத்தை திடீரென்று விட்டுவிடுவது கஷ்டம்தான். இருந்தாலும் இது சம்பந்தமான ஆராய்ச்சி – அனுபவம் இது இரண்டையும் அடிப்படை யாகக் கொண்டு சில வழிமுறைகளைச் சொல்லியி ருக்கிறார்கள்.

அதாவது புகைப்பிடிப்பதை நிறுத்த 10 வழிகள் உண்டு என்று சொல்கிறார்கள்.

முதலாவது கருத்து என்னவென்றால் கொஞ்ச நாளைக்கு புகைப்பிடிக்கும் நண்பர்களை விட்டு விலகியிருக்க வேண்டும். இதனால் புகைப்பிடிக்கும் ஆசை குறையும். அந்தப் பழக்கத்தை மறுபடியும் ஆரம்பிக்கக் கூடாது என்ற எண்ணம் வலுப்பெறும்.

இரண்டாவது கருத்து : புகைப் பிடிப்பதை எதிர்த்து தீவிரமாக பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடவேண்டும். அது மற்றவர்களுக்கும் பயன்படும். உங்களுக்கும் பயன்படும். உங்கள் உள்ளுணர்வை அது தூண்டும். உங்களை உறுதி கொள்ள வைக்கும்.

மூன்றாவது கருத்து : தினமும் இருதடவை குளிக்க வேண்டும். முதலில் வெது வெதுப்பான நீரிலும் பின்னர் குளிர்ந்த நீரிலும் மாற்றி மாற்றிக் குளிக்க வேண்டும்.

நான்காவது கருத்து : உடற் பயிற்சிகள் செய்ய வேண்டும். மூச்சுப் பயிற்சிகள் மிகவும் நல்லது.

ஐந்தாவது கருத்து : சாப்பாடு மிதமாக இருக்க வேண்டும். பச்சைக் காய்கறிகள் – பழங்கள் என்பவற்றை சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆறாவது கருத்து : நீண்ட நேரம் பசியோடு இருக்கக் கூடாது. புகைப்பிடிப்பதை நிறுத்த முயற்சி செய்யும் போது எடைக்குறைப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கூடாது.

ஏழாவது கருத்து : கோப்பி, தேநீர், மதுபானம், போதைப்பொருள் கலந்து உணவுகளை தவிர்க்க வேண் டும். இவையெல்லாம் புகைபிடிப்பதை ஊக்கப்படுத் தும். கடுகு – மிளகு போன்ற காரமான பொருட்களை யும் தவிர்க்க வேண்டும்.

எட்டாவது கருத்து : கையில் சிகரெட், புகையிலை ஏதாவது இருந்தால் உடனே தூக்கி எறிந்து விடுங் கள். அவை கையில் இருக்கும் வரைக்கும் புகைப் பிடிக்கும் ஆசை வந்து கொண்டே இருக்கும்.

ஒன்பதாவது கருத்து : இறை நம்பிக்கை உள்ள வர்கள் புகைபிடிக்கும் எண்ணம் வரும் போதெல்லாம் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்து விடலாம்.

பத்தாவது கருத்து: உங்களுக்கு மிகவும் வேண்டிய வர்களிடமெல்லாம் நீங்கள் புகைப்பிடிக்கும் பழக் கத்தை நிறுத்தி விட்டதாக சொல்லிவிடுங்கள்.

இந்தப் 10 வழிகளையும் கடைப்பிடிக்க ஆரம்பித் தால் புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்திவிடலாம் என்று சொல்கிறார்கள் அனுபவசாலிகள்.

ஒரு முக்கியமான இடத்தில் நின்று கொண்டிருந் தார் ஒருவர். அங்கே வந்த இன்னொருவர்,

"ஏன் சேர் இந்த இடத்தில் சிகரெட் பிடிக்கலாமா?" என்று அனுமதி கேட்டார்.

"இந்த இடத்தில் சிகரெட் பிடிக்கக்கூடாது" என்றார் இவர்.

"நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் இந்த இடத்தின் கீழே நிறைய சிகரெட் துண்டுகள் கிடக்கி றதே..." என்றார் அவர்

"அவர்களெல்லாம் உங்களை மாதிரி என்னிடம் அனுமதி கேட்காதவர்கள்" என்றார் இவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு
# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதாரத் திணைக் களத்தால் கோரப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப் பிற்கு விண்ணப்பித்திருந்தவர்க ளில் தகுதியானவர்களுக்கான நேர் முகப்பரீட்சை நாளை சனிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள் ளது. இவர்களிற்கான தனித்தனி யான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ் வரன் அறிவித்துள்ளார். இவர்க ளது பெயர் விபரங்கள் வருமாறு,

தே. லசியா (கொடிகாமம்), ஜெ. மதுரா (ஆவரங்கால்), தி. நிமலராஜி (சங்கானை), சு. புஸ்பலதா (பண் ணாகம் தெற்கு), செ. ரஜிமலா (தெல் லிப்பளை), பா. றீதா (புத்தூர் வட க்கு), ச. றேனுகா (திருநெல்வேலி), கோ. றேனுகா (காரைநகர்), தி. சன்யா (பொலிகண்டி கிழக்கு), எ. சரண்யா (குரும்பசிட்டி), சி. சரோஜா (கட்டுடை), க. சரூஜா (ஆவரங்கால்), சி. சாமினி (ஆனைக்கோட்டை), க. சண்முகப்பிரியா (புத்தூர் கிழக்கு), சி. சர்மிளா (மூளாய் மேற்கு), பா. அகல்யா (கைதடி தெற்கு), பே. அனற் கவோனி (இளவாலை), ஆ. டக்சிகா (சூராவத்தை, சுன்னாகம்), ஜெ. டிஷாந்தினி (அளவெட்டி வடக்கு), செ. கௌரி (அல்வாய் மேற்கு), கு. குண ரூபா (மட்டுவில்), சி. ஜனனி (மல் லாகம்), சி. ஜனனி (வேலணை மேற்கு), ச. ஜனந்தினி (சாவகச் சேரி), ஸ். ஜெரின் (பாசையூர்), இ. ஜெய மதி (சங்கத்தானை), வ. கஜேந்தினி (தொல்புரம் மத்தி), நா. கலைச் செல்வி (காரைநகர்), இ. கனிதா (அர சடி, நல்லூர்), சு. கார்த்திகா (மட்டு வில் வடக்கு), ச. காருண்யா (மயி லிட்டி வடக்கு), இ. குகப்பிரியா (வட்டு கிழக்கு), ஹ. சோபனா (ஏழாலை கிழக்கு), இ. சோபிகா (அராலி வட க்கு), ச. சோபிதா (மல்லாகம்), சி. சிந் துஷா (வரணி), சி. சிவநந்தினி (சங் குவேலி), சி. சிவராணி (அராலி மேற்கு), அ. சிவசக்தி (டச்றோட், மூளாய்), க. கௌசல்யா (இளவாலை), ந. சிறி நாயகி (சண்டிலிப்பாய் வடக்கு), த. சுகீதா (காங்கேசன்துறை), த. சுபாஜினி (ஏழாலை மத்தி), வே. சுதா (சங் கானை கிழக்கு), கு. சுதாஜினி (கொக் குவில் கிழக்கு), சி. தனுஜா (சங் கானை வடக்கு), இ. தர்சினி (கொழும் புத்துறை), து. தங்கராசா (அராலி தெற்கு), இ. வெள்ளிநாயகி (கோண் டாவில் கிழக்கு), மு. கார்த்திகா (கோப் பாய் மத்தி), ந. ஜனார்த்தனி (ஊரெழு கிழக்கு), த. தர்சினி (நெடுந்தீவு) (ஓ)

# இடம்பெயர்ந்து வரும் மாணவர்களின் உரிமைகளை — பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் —

## உதுல் பிரேமரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மாணவர்களின் உரிமைகளை பாது காக்க அரசாங்கம் விரைந்து நடவ டிக்கை எடுக்க வேண்டும் என அனை த்து பல்கலைக்கழக மாணவர் ஒன் றியத்தின் அமைப்பாளர் உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப் பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடம்பெயர் மக்களுக்கு சமஷ்டி முறை ஆட்சி அவசியமில்லை எனவும் அவர்களது உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் தங்கி யுள்ள மாணவர்கள் கல்வியைத் தொடர தேவையான சகல நடவடிக் கைகளையும் அரசாங்கம் மேற் கொள்ள வேண்டுமென குறிப்பிட் டுள்ளார். (ஓ-6)

# தொழிற் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகம் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் 250 இளை ஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி யை வழங்கவுள்ளது. இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் இளைஞர் யுவ திகளுக்கு கணனி மென்பொருள், கணனி வன்பொருள், மரப்பொறியி யல், முகவுடல் சிகை அலங்காரப் பயிற்சி, விவசாய உபகரணங்கள் திருத்துதல், உந்துருளி திருத்துதல், ஆடை வடிவமைத்தல், பற்றிக் ஆடை வடிவமைப்பு பயிற்சி ஆகியன இடம் பெறவுள்ளன.

இப்பயிற்சியில் இணைந்துகொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங் களை *இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ் மாவட்டம், 103 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட் டுள்ளனர். (ஓ-134)

## விவசாயக் கடன் பெற்றவர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நியாப், நெக்கொட் நிறுவ னங்களின் அனுசரணையுடன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங் களினூடாக வழங்கப்பட்ட விவசா யக்கடன் பெற்ற பயனாளிகளுக் கான ஒருநாள் பயிற்சி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை அண்ணா சிலையடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வட மராட்சி தெற்கு, மேற்கு கிராம அபி விருத்திச் சங்கங்களின் சமாசத்தி னர் மேற்கொண்டுள்ளனர். (ஓ-6)

## இராசி பலன்

*17.07.2009*
*(ஆடி 01, வெள்ளிக்கிழமை)*
*தசமி முன்னிரவு 8.13 மணிவரை*
*பரணி பிற்பகல் 12.50 மணிவரை*
*இராகுகாலம் 10.30-12.00 மணிவரை*
*சுபநேரம் 6.00-7.30 மணிவரை*
*கார்த்திகை விரதம், ஆடிப்பிறப்பு.*

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், வெகுமானம், சயன சுகம், விருந்துபசாரம். |
| இடபம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம், குடும்பக் கவலை. |
| மிதுனம் | குடும்ப மகிழ்ச்சி, நல்ல வருமானம், முயற்சி கைகூடும், பெருமையடைதல். |
| கடகம் | பிரபுத்தனம், தெய்வதரிசனம், இஷ்ட சித்தி, பெரியோரால் மதிக்கப்படுதல். |
| சிங்கம் | சரீரப் பிரயாசை, பயந்த சுபாவம், கட்டுப்படுதல், முயற்சி தாமதம். |
| கன்னி | மனக்கவலை, ஆரோக்கிய குறைவு, முயற்சி தாமதம், போசன சுகம். |
| துலாம் | தேகநலன், தெய்வதரிசனம், முயற்சி கைகூடும், புத்திர வழி நன்மை. |
| விருச்சிகம் | தெய்வதரிசனம், காரிய நன்மை, போசன சுகம், பெரியோர் உதவி. |
| தனுசு | சிந்தனை மிகுதி, பணக்குறைவு, அஜீரணக் கோளாறு, வேலைச் சுமை. |
| மகரம் | தொழிலில் ஆர்வம், நல்ல முயற்சி, போசன சுகம், வாக்கு மேன்மை. |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், வாகன சுகம், சகோதரர் உதவி. |
| மீனம் | கடின வார்த்தை, காரிய தாமதம், அதிக செலவு, கௌரவக் குறைவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 |
| தக்காளி | 160 | 180 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 90 | 110 | 120 |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 20 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 60 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 20-30 | 40-50 | 30 |
| கரணைக் கிழங்கு | 70 | 80 | - |
| பயிற்றங்காய் | 60 | 70 | 50 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 40 | 50-60 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 20 | 15 | 15 |
| தேசிக்காய் | 50 | 60 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |







அமரர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக அவரது மாணவர்களால் நடத்தப்பட்ட "பருத்திநகரின் பெரும் சமர்" துடுப்பாட்ட போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி நா.சிவயோகன் உரையாற்றுவதையும், போட்டியில் பங்குபற்றிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மற்றும் தும்பளை நாவலர் விளையாட்டுக்கழக அணிகளையும் வெற்றியீட்டிய அணிக்கு திருமதி சிவயோகன் வெற்றிக் கோப்பை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## இலங்கை வங்கியின் நெல்லியடி கிளைக்கு காணி கொள்வனவு செய்ய தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி நெல்லியடி கிளைக்கு புதிய கட்டடமொன்றை அமைக்க ஆறு பரப்புக் காணியையோ அல்லது கட்டடத்துடன் கூடிய காணியையோ கொள்வனவு செய்ய முடிவு செய்துள்ளது.

காணியையோ அல்லது கட்டடத்துடன் கூடிய காணியையோ விற்பனைசெய்ய விரும்புவர்கள் தமது கேள்விகளை வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பணிமனைக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுகப்பட்டுள்ளனர். (ஓ-134)

## முதியோர் அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

முதியோருக்கு அடையாள அட்டை வழங்கி அவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்குமுகமாக நடத்தப்படும் நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-30)

## மாலைநேர மீன் சந்தையில் கடலுணவுகள் கிலோ 200 ரூபாவுக்கு விற்பனை

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் 24 மணி நேரம் மீன்பிடிக்க அரசு அனுமதி அளித்தள்ளதால் மாலை நேர மீன் சந்தையில் கடலுணவுகள் மலிவாக விற்கப்படுகின்றன.

கடல் தாமரை, கடல் இறால், சிங்கி இறால் பெரியது, கணவாய், நண்டு, பெருநண்டு (கறுப்பு) ஆகிய கடலுணவுகள் ரூபா 200க்கு மலிவாக விற்பனை செய்யப்படுகின்றன. (6-72)

## சுனாமி பாதிப்பின் பின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்த நடமாடும் சேவை நாளை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயற் திட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இன்னும் தீர்க்கப்படாத சட்ட மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சினை நாளை சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இச் செயற்திட்டத்தில் வீடமைப்பு மற்றும் நட்டஈடு/இழப்பீடு தொடர்பான சட்ட பிரச்சினைகள், காணிப் பிணக்குகள் ,சட்டரீதியான ஆவணங்களான தேசிய அடையாள அட்டை, பிறப்பு,இறப்பு,விவாக அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாமைக்கு தீர்வு, வயது முதிர்ந்தோர் அடையாள அட்டை வழங்கல், புகைப்படங்கள் இலவசமாக வழங்கல், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள், ஏனைய சட்ட ரீதியான பிணக்குகள் போன்ற பிரச்சினைக்ளுக்கு இதுவரை தீர்வு கிடைக்கப் பெறாதவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-30)

## கணித மதிப்பீடும் வழிகாட்டல் கருத்தரங்கும்

தென்மராட்சிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 6,9 கணிதமதிப்பீடு (6), க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கணித வழிகாட்டல் கருத்தரங்கு (3) என்பன எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், விவசாயக்குழுக்கூட்டம் என்பன தவிர்க்க முடியாத காரணத்தால் 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தெல்லிப்பளைப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (6)

## வாதரவத்தை கிராமத்துக்கு மின் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையினரால் வாதரவத்தை கிராமத்துக்கு மின் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிக்கான மின் கம்பங்கள் நட்டு மின் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மின் வேலைகள் முடிந்ததும் அப் பகுதிக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கலாமென அப் பகுதி மக்கள் எதிர்பார்க் கின்றனர். (ஓ-134)

## பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியி லிருந்து இம்முறை 22 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

கலைத் துறையிலிருந்து 18 மாணவர்களும் விஞ்ஞானத்துறையிலிருந்து 4 மாணவர்களுமே பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (ஓ-6)

## ஒன்றுகூடலும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பிராந்திய திட்டமிடல் முதுகலைமாணி மாணவர்களின் வருட இறுதி ஒன்றுகூடல் நிகழ்வும் விசேட கருத்தரங்கும் நாளை சனிக்கிழமை காலை-10 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் இணைப்பாளர், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வி பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பதுடன் விசேட விருந்தினராக பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடா-திபதி பேராசிரியர் சத்தியசீலன் மற்றும் கௌரவ விருந்தினராக திட்டமிடல் கற்கை நெறி விரிவுரையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## வீதி முழுமையாக திருத்தப்படாததால் மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

இருபது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் இருந்த வாதரவத்தை பெரிய பொக்கணை வீதி ஒரு கிலோ மீற்றர் வரையும் திருத்தப்பட்டும் மிகுதி இரண்டரை கிலோ மீற்றர் தூரம் திருத்தப்படாததைத் தொடர்ந்து இப் பகுதியால் பிரயாணம் செய்யும் வாகனங்களில் செல்வோர் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிய வருகிறது.

வீதியின் திருத்தப்படாத பகுதியை திருத்தி இப்பகுதி மக்கள் சிரமமின்றி பிரயாணம் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-134)

## 62ஆவது ஆடிவிழா

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு கலைத்துறை விளையாட்டுக் கழகம் நடாத்தும் 62 ஆவது ஆண்டு ஆடிவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கழக மைதானத்தில் எம.குகராஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக வலி மேற்கு பிரதேச சபை செயலாளர் எஸ்.புத்தி சிகாமணி வலிமேற்கு பிரதேச செயலாளர் திருமதி தேவநந்தினி பாபு ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக திடீர் மரண விசாரணை அதிகாரியும் சுயாதீன மனித உரிமை ஆணைக்குழு பணிப்பாளருமான எஸ்.மோகன், சங்கானை விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். துரைசிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சிவலோகநாதக் குருக்கள், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேகானந்த ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், கலைநிகழ்வுகளாக சிறுவர் நிகழ்ச்சிகள், துடுப்பாட்ட போட்டிகள், வலைப்பந்தாட்டம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-30)


## உடனடி வேலை வாய்ப்பு

இலங்கை காப்புறுதி வரலாற்றில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்று தனது வலையமைப்பினை தென்மராட்சி பிரதேசத்திற்கு விஸ்தரிக்கும் நோக்கில் இப் பிரதேசத்தில் வசிக்கும்

- விடா முயற்சியும் திறமையும் உடையவர்கள்
- வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க துடிப்பவர்கள்
- கனவை நனவாக்குபவர்கள்

என்பவற்றை இலட்சியமாக கொண்டவர்களில்

- காப்புறுதி ஆலோசகர்கள்
- காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு

- க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும்
- க.பொ.த உயர்தரத்தில் சித்தி (பதவி II)
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் (முக்கியமல்ல)

என்பவற்றை தகைமையாகக் கொண்டவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு சுய விபரக்கோவையினை(தொலைபேசி இலக்கத்துடன்) அனுப்பிவைக்கவும்.

***இவற்றிற்கான நன்மைகள்***

- யாராலும் தடுக்கப்பட முடியாத வரையறை இல்லா ஊதியம்
- இலவச வெளிநாட்டு சுற்றுலாவிற்கான வாய்ப்பு
- மாதாந்த வருடாந்த போட்டிகளில் பங்குபற்றி தங்கம் போன்ற பரிசில்களைப் பெறும் வாய்ப்பு
- முயற்சிக்கு ஏற்ப விரைவான பதவி உயர்வு
- மோட்டார் சைக்கிள்,கார், லோன் போன்ற வசதிகள்

I) விண்ணப்பிக்கும் முகவரி:- மே/பா வலம்புரி,
விளம்பர இல.2970
இல.03,02 ஆம் ஒழுங்கை,பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

II)விண்ணப்ப முடிவு திகதி:-24.07.2009

Note நேர்முகத்தேர்வு பயிற்சி வகுப்புக்கள் என்பன சாவகச்சேரியில் நடைபெறும். (2970)



2010 ஆம் ஆண்டளவில் வடக்கு, கிழக்கு பெருநிலப் பகுதியினுள் 15 குடும்பங்களுள் ஒருவரேனும் எமது கற்கை நிலையத்தில் டிப்ளோமா கற்கை நெறியை முடித்து சான்றிதழ் பெற்றிருப்பர்.

18 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length-Six Month
Jul 2009 to Dec 2009

நேரடி விரிவுரை Personal Contact Programme

**1 Dip.in Psychology** (உளவியல் டிப்ளோமா)

i)Basic Psychology
அடிப்படை உளவியல்
ii)Human Resources Development
மனிதவள மேம்பாடு
iii)Social Psychology
சமூக உளவியல்
iv)Guidance and Counselling
ஆலோசனை கூறுதலும், வழிகாட்டுதலும்
v)Class Room Psychology
வகுப்பறை உளவியல்
vi) Experimental Psychology
சோதனை உளவியல்

**2 Dip.in Education Management** (கல்வி முகாமைத்துவ டிப்ளோமா)

i)Educational Psychology
கல்வி உளவியல்
ii)Guidance & Counselling
ஆலோசனை கூறுதலும், வழிகாட்டுதலும்
iii)Teaching Learning Transaction
கற்பித்தல், கற்றல், பரிமாற்றம்
iv) Education for National Development
தேசிய அபிவிருத்திக்கான கல்வி

பரீட்சை மற்றும் விரிவுரை (Personal Contact Programme)
கல்முனை, மட்டக்களப்பு,திருகோணமலை,புத்தளம்,வவுனியா, மன்னார்,யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு,ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய பிராந்திய நிலையங்களில் நடைபெறும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
MARUTHUR A.HASSEN
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24,1st Floor, Super Market Complex,Main Street,Sainthamaruthu-07
Tel:067 2222917, 060 2671749,060 2679688,071 803 4848
யாழ்ப்பாண முகவர்: N.Piratheepan T.P- 0776702505
விண்ணப்ப முடிவுத்திகதி:28.07.2009
(2971)

# ஆபாச படங்களை வெளியிடும் இணைய தளங்களை தடை செய்ய நடவடிக்கை

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆபாச படங்களை வெளியிடும் 15 இணையத் தளங்கள் உள்ளன. அவை தொடர்பில் ஆராய்ந்து உடனடியாக அவற்றை தடை செய்வதற்கும், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் கடந்த புதன்கிழமை காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆபாச படங்கள் அடங்கிய இணைய தளங்கள் தொடர்பில் நாங்கள் அண்மையில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு அறிவித்தோம். இலங்கையில் இவ்வாறான 15 இணையத்தளங்கள் உள்ளன. முக்கியமாக சிறுவர்கள் இணையத்தளங்களில் இவ்வாறான ஆபாச படங்களைப் பார்வையிடுகின்றனர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். எனவே குறித்த இணையத்தளங்களை தடை செய்வதற்கும் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பாதுகாப்பு தரப்புக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். அந்த இணையத்தளங்களை நாங்களும் பார்வையிட்டோம். அவற்றை பார்ப்பது மிகவும் கடினமாகும். அந்தளவுக்கு மோசமான முறையில் காட்சிகள் படங்கள் உள்ளன. நாட்டின் பிரபலமான இருவரின் விபரங்களும் அவற்றில் காணப்பட்டன.

அத்துடன் ஹோட்டல் அறைகளும் சட்டவிரோதமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான காட்சிகளும் குறித்த இணையத் தளங்களில் உள்ளன. இந் நிலையில் குறித்த ஆபாச காட்சிகள் சம்பந்தப்பட்டவருக்கு தெரியாமல் எடுக்கப்படுவதால் அவரின் எதிர்காலமும் சிக்கலுக்குள்ளாகின்றது. எனவே, இது தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார். (ஓ-6)

# நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள 10,033 முதியவர்களை விடுவிக்க நடவடிக்கை

## மீள்குடியேற்ற அமைச்சு தெரிவிப்பு


(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களில் 65 வயதுக்கு மேற்பட்ட 10 ஆயிரத்து 33 முதியவர்களை அங்கிருந்து விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் அவர்களை அவர்களது உறவினர்களிடம் சேர்ப்பிக்க அல்லது முதியோர் இல்லங்களிலோ தங்கவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள சுமார் 2 இலட்சத்து 83 ஆயிரத்து 836 பொதுமக்கள் வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முகாம்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களில் சுமார் 10 ஆயிரம் பேரே இவ்வாறு அம்முகாம்களிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதென்றும் மீள்குடியேற்ற அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஓ-6)



அமரர் கலாநிதி க.கனகராசாவின் நினைவுப் பேருரை அண்மையில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தில் நடைபெற்றபோது அன்னாரின் படத்திற்கு மில்க்வைற் அதிபர் சிவநேயர். இ.தவகோபால் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம். (படம்-எஸ்.கதிரவேலு)

# இரட்டைமொழி ஆசிரியர்களாக பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் கல்வி அமைச்சினால் ஆரம்பம்

(கொழும்பு)

ஆசிரிய மத்திய நிலையங்களைப் பயன்படுத்தி பாட ஆசிரியர்களை இரட்டைமொழி ஆசிரியர்களாகப் பயிற்றுவிக்கும் வேலைத் திட்டமொன்றை கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய இரட்டைமொழிக் கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பல பாடங்களை ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கத் தேவையான ஆசிரிய திறனை விருத்தி செய்யும் நோக்குடன் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கு இரட்டை மொழிக்கான ஆசிரிய பயிற்சியை வழங்குவதற்கு தகைமைமிக்க ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு, 2009 ஆம் ஆண்டின் முன்னோடி வேலைத் திட்டமாக வடக்கு, கிழக்கு உட்பட சகல மாகாணங்களையும் உள்ளடக்கியதான 20 ஆசிரிய மத்திய நிலையங்களின் விஞ்ஞான பாட ஆசிரியர்களை இலக்காகக் கொண்டு இவ் வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.டீ.பண்டார தெரிவித்தார்.

இவ் வேலைத்திட்டத்தில் தகைமையுடைய ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் அண்மையில் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை



ஆனால் அவனோ அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகளில் இது பெரிய பாதிப்பை யேற்படுத்தும் என்றான்.

இருள் சூழ்ந்த அந்த நேரத்தில் இரு மாசாய் வீரர்கள் அருகில் வந்து தாங்கள் அந்த இரவில் பயணிகளுக்குப் பாதுகாப்புத் தருவதாக ஏற்றுக்கொண்டனர். அவர்கள் ஈட்டியும் மின்கல விளக்கும் கையுமாக வந்ததைக் கண்ட ஒளமா பயந்தவளாய் ஏதேனும் மிருகங்கள் தங்களைத் தாக்க வாய்ப்புண்டா என்று விசாரித்தாள்.

அவர்கள் சுவாஹிலி மொழியில் பேசினார்கள். பெரிதாக ஒன்றுமிராது. எதற்கும் ஜாக்கிரதை நன்று. இரவில் மலசலம் கழிக்கப் போவதாயின் தங்களில் ஒருவனும் கூட வரவேண்டும் என்று கூறினார்கள். பிரான்சிஸ் மிருகங்களின் நடமாட்டங்கள் பற்றி அவர்களோடு உரையாடிக் கொண்டிருக்கும்போது ஒபாமா வானத்தில் தவழும் நட்சத்திரக் கூட்டங்களின் அழகில் தன்னையே பறிகொடுத்து அண்ணாந்து வானத்தைப் பார்த்த வண்ணம் அங்கிருந்து மெல்ல நழுவினார்.

வானத்தில் நட்சத்திரங்களைப் பார்ப்பது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. பலவருடங்களுக்குப் பின் இயற்கையின் தாராளத்தை கண்டுகளித்தார். மேலே "பால்வெளி" (MILKY WAY) தெரிகிறது என்று கூடவே வந்த பிரிட்டிஸ்காரர் உவில்கொர்சன் கூறியதும் அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவர் அதன் நுனியிலிருந்து அடிவரையும் எல்லாவற்றையும் விபரித்தார். அவருக்கு இருக்கும் அறிவு அபாரமானது. பாசறை அமைப்பது, வண்டி திருத்துவது வானத்தில் பறக்கும் பறவைகளின் பெயர்கள் என்று எதைக் கேட்டாலும் சொல்லி விளங்கவைப்பார். அப்பப்பா அவர் ஒரு நடமாடும் நூலகம் அல்லது அறிவுக் களஞ்சியம் தான். தானும் அவ்வாறு வர வேண்டும் என்ற ஆசை ஒபாமாவுக்கு வந்ததில் ஆச்சரியமில்லை.

அவர் இளமையில் கென்யாவில் வெள்ளையர்களின் மலை நாட்டுத் (White Highlands) தோட்டங்களில் வளர்ந்தவர். கென்யா சுதந்திரமடைந்த பின் தங்கள் தோட்டங்களை விற்றுவிட்டு அவரின் குடும்பம் இங்கிலாந்துக்குத் திரும்பியது.

அங்கு வைத்தியக்கல்லூரி சென்று பட்டதாரானார். தேசிய சுகாதார சேவையில் சேர்ந்து லிவர்பூல் நகரத்தில் டாக்டராகத் தொழில் புரிந்தார். அவர் மனைவி மனநோய் வைத்தியர். இருவரும் பின்னர் கென்யா திரும்பினர். ஆனால் கென்யாவில் டாக்டர்களின் தொகை அதிகரித்தபடியால் மலாவி நாட்டுக்குச் (MALAWI) சென்று கடந்த ஐந்தாண்டுகளாக தொழில்புரிகின்றனர். சரி, அவர் ஏன் மீண்டும் ஆபிரிக்காவுக்கு வந்தார்.

ஆபிரிக்கா தான் அவரின் தாயகம். அந்தப் பாசம். இங்கிலாந்து சனநெருக்கம் கூடிய நாடு. அவர்களிடம் எல்லாம் இருக்கிறது. ஆனால் அவர்கள் எதையும் அனுபவிக்க நேரமில்லாதவர்கள். கோடி கொடுத்தாலும் துய்த்தலில்லவா இது பிரித்தானியாவில் வாழும் மக்களுக்குத் தான் பொருந்தும்.

97

அங்கே எப்போதும் தான் ஒரு வெளிநாட்டவன் என்று உணர்ந்தார். மலாவியில் தொழில் புரிவது தான் இன்பம். மக்களும் அந்நாட்டு டாக்டர்களும் திறமைசாலிகள். அர்ப்பணிப்புடன் பணிபுரிகின்றார்கள். பயிற்சி ஆஸ்பத்திரியொன்றைக் கட்டி சகல வசதிகளையும் கொடுத்தால் டாக்டர்களின் தொகையை மூன்று மடங்காக உயர்த்தலாம். "அதன்பிறகு மலாவியையும் நாங்கள் விட்டுத் திரும்ப வேண்டியதுதான். நாங்கள் இந்த விதியை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்" என்றார்.

### ஜம்பெர்ன்

கிழக்கு வெளுத்தது. பாசறையை விட்டு வெளியில் புறப்பட்டது வண்டி. போகும் வழியெல்லாம் கண்ட காட்சிகள் பிரமிக்க வைத்தன. குழந்தைகள் வர்ணப் புத்தகங்களில் காணும் காட்சியாக உலகம் அவர்கள் முன் பக்கமாக விரிந்து காட்சி தந்தது. தலை நீண்ட ஒட்டகச்சிவிங்கி, மந்தைகள், புற்றரவையில் புரண்டும் கொட்டாவி விட்டும் கிடக்கும் சிங்கக் கூட்டம், சேறு நிறை குமாளம் போடும் எருமைகள், அவற்றின் முதுகில் இருக்கும் அழுக்குகளை போக்கும் தோட்டிக் குருவிகள், காண்டா மிருகங்களின் ஊதா நிறக் கண்களும், மூக்குகளும் ஆற்று நீரின் மேல் மட்டத்தில் மாபிள் கற்கள் மாதிரி நீட்டிக் கிடந்தன. (தொடரும்)



# புதிய கணனியை பயன்படுத்த போகிறீர்களா?

வீட்டில் பயன்பாட்டில் உள்ள கணனி வாங்கி மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டால் அது பழைய மொடலாகி விடுகிறது. கூடுதல் திறன் கொண்ட புதிய கணனிக்கு மாற விரும்புகிறோம். யாருக்குத்தான் ஆசை இருக்காது.சரி, புதிய கணனி வாங்கிவிடுகிறோம்.

அதற்காக பழைய கணனியை அப்படியே விட்டுவிட முடியுமா? நாம் கணனியில் மேற்கொள்ளும் பணிகள் தொடர வேண்டுமானால் பழைய வீட்டிலிருந்து பொருட்களைப் புதிய வீட்டிற்குக் கொண்டு வருவது போல புரோகிராம்களையும் பைல்களையும் புதிய கணனிக்கு மாற்றவேண்டுமே. எதை எல்லாம் கட்டாயம் மாற்ற வேண்டும்? எதை எல்லாம் விருப்பமிருந்தால் மாற்றலாம்? அப்படி மாற்றுகையில் என்ன என்ன பாதுகாப்பு வழிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பார்ப்போமா?

புதுக் கணனியை இன்ஸ்டோல் செய்தவுடன் நம்மில் பலர் அதில் மாற்றப்பட்ட அல்லது இன்ஸ்டோல் செய்யப்பட்ட புரோகிராம்களை இயக்கிப் பார்க்கமாட்டோம்.உடனடியாக இன்டர்நெட் இயங்குகிறதா என்று பார்ப்போம்.இங்குதான் பிரச்சினைக்கு பிள்ளையார் சுழி போடப்படுகிறது. இன்டர்நெட்டில் தான் நம் கணனியைக் கைப்பற்றும் பல அரக்கர்கள் இருக்கிறார்களே! அப்படியானால் சரியான முறையில் நம் கணனியில் பாதுகாப்பினை அமைக்காமல் உடனே இன்டர்நெட் செல்வது தவறு அல்லவா!



சோபோஸ் (Sophos) என்னும் சுவீடன் நாட்டு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் புதியதாக இயக்கப்படும் கணனிகளில் 50 வீதமானவை பத்து நிமிடங்களில் இன்டர்நெட் சென்று அடுத்த ஐந்து நிமிடங்களில் ஏதேனும் ஒரு மால்வேர் தொகுப்பினால் பாதிக்கப்படுகின்றன என்று கண்டறிந்துள்ளது. என்ன பயமாக இருக்கிறதா! கவலைப்பட வேண்டாம். இதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்க்கும் வழியாகக் கீழ்க்காணும் வழிமுறைகள் தரப்பட்டுள்ளன.

பழைய கணனியிலிருந்து என்ன வேண்டும், பழைய கணனியில் அது வாங்கப்பட்ட நாளிலிருந்து இன்ஸ்டோல் செய்தவை அனைத்தும் இருக்கும் பல வெகு மாதங்களாக தேவைப்படாததால் பயன்படுத்தப்படாமல் இருக்கும். எனவே அனைத்துப் புரோ கிராம்களையும் மற்றும் டேட்டா பைல்களையும் முழுமையாகப் பார்வையிட்டு எவை எல்லாம் அவசியமாகத் தேவைப்படும் என முடிவு செய்திடவும். இதில் டேட்டா பைல்களையும் நாம் சிடியில் கொப்பி செய்து மாற்றிவிடலாம்.ஆனால் புரோகிராம்களை மாற்ற நமக்கு அவற்றின் ஒரிஜினல் சிடிக்கள் அல்லது புரோகிராம்கள் தேவைப்படும். இனி எப்படி மாற்றுவது என்று பார்ப்போமா!

### பைல்கள் மாற்றம்

பழைய கணனியில் உள்ளபல டேட்டா பைல்களை புதிய கணனிக்கு மாற்ற விரும்புவீர்கள். அல்லது அவற்றை சிடியில் பதிந்து வைத்திட திட்டமிடுவீர்கள்.இவற்றை முதலில் சரியாக வகை செய்திட வேண்டும். அவை உருவான நாள் அடிப்படையில், டேட்டா எதனைப் பற்றியது என்பதன் அடிப்படையில் பயன்படுத்துபவரின் அடிப்படையில் என வகைப்படுத்த வேண்டும்.இவற்றுக்கு சரியான லேபிள் கொடுப்பது நல்லது. உங்களுக்குப் பிடித்தமான மற்றும் தேவைப்படும் படங்கள் டொகுமெண்ட்கள்,மியூசிக் பைல்கள், வீடியோ கிளிப்கள், சினிமா பைல்கள்,வெப்சைட்பேவரைட் சைட்கள் என இவை பல வகைப்படும்.

குறிப்பாக உங்கள் பழைய கணனியை விற்கப் போகிறீர்கள் என்றால் இதுதான் உங்கள் பைல்களைப் பெற கடைசி சான்ஸ் இல்லையா! எனவே கவனமாக அனைத்தையும் வகைப்படுத்தி சிடியில் கொப்பி செய்திடுங்கள். பின் பழைய ஹார்ட் டிஸ்க்கை முற்றிலுமாக போர்மட் செய்திடுங்கள். அனைத்து பைல்களையும் கவனமாக வகைப்படுத்தி சிடிக்களில் பதிந்துகொண்டீர்களா. அனைத்திற்கும் டைரக்ரி, போல்டர் மற்றும் பைல்கள் லிஸ்ட் வைத்துக் கொள்வது நல்லது. இதன் துணை கொண்டு பழைய கணனியிலிருந்து தேவைப்படும் பைல்கள் எல்லாம் சிடியில் கொப்பி ஆகிவிட்டதா என்று சோதனை செய்து கொள்ளலாம்.




உங்கள் கணனியில் உள்ள புரோகிராம்களில் சில இன்டர்நெட்டிலிருந்து டவுண்லோட் செய்யப்பட்டு இன்ஸ்டோல் செய்யப் பட்டிருக்கலாம். அவற்றின் டவுண்லோட் செய்யப் பட்ட ஒரிஜினல் பைல்கள் இருந்தால் அவற்றை மொத்தமாக ஒரு தனி சிடியில் கொப்பி செய்து எடுக்கவும். இவற்றைக் கொண்டு உங்களுக்குத் தேவைப்பட்ட புரோகிராம்களை தேவைப்படும் பொழுதில் இன்ஸ்டோல் செய்திடலாம்.

### டெமோ விளம்பரப் புரோகிராம்களை நீக்குக

இன்டர்நெட்றில் பிரவுஸ் செய்திடுகையில் சில புரோகிராம்கள் நமக்கு பல பயன்பாடுகளைத் தருவதாக விளம்பரப்படுத்தி நம்மை இன்ஸ்டோல் செய்திட தூண்டும் வகையில் இருக்கும். நாமும் இலவசம் தானே என்று இன்ஸ்டோல் செய்திடுவோம். இயக்கிப் பார்க்கையில் இவை ஒருவாரம் அல்லது 15 நாட்கள் மட்டுமே இலவசமாக இயங்கும் என அறிவிப்பு வரும். அதற்குப் பின் வேண்டும் என்றால் கட்டணம் செலுத்தச் சொல்லிக் கேட்கும்.பின்னர் இதனை அன் இன்ஸ்டோல் செய்திடாமல் வைத்திருப்போம். இந்த மாதிரி புரோகிராம்களைக் தொடர்ந்து வைத்திருப்பதால் எந்தப் புண்ணியமும் இல்லை. இத்தகைய் புரோகிராம்களைக் கண்டறிந்து அவற்றை அழித்திட வேண்டும். புதிய கணனிக்கு கொண்டு செல்லக்கூடாது.

### புதிய கணனியைப் பாதுகாக்கும் வழிகள்

புதிய கணனியை இயக்கும் முன் அதனைப் பாதுகாக்கும் படைகளைச் சரியாக அமைக்க வேண்டும். சில வேளைகளில் கணனி தரும் நிறுவனங்கள். ஆப்பரேட்டிங் சிஸ்டத்துடன் ஒரு சில இத்தகைய பாதுகாப்பிற்கான சொப்ட்வெயர் தொகுப்புகளைப் பதிந்திருக்கலாம்.ஆனால் நீங்கள் ஏற்கனவே சில தொகுப்புக்களுக்குப் பழகிவிட்டால் அவற்றையே இன்ஸ்டோல் செய்வது நல்லது. முதலில் எத்தகைய பாதுகாப்பு வளையங்கள் வேண்டும் எனப் பார்க்கலாம்

அ) ***அன்ட்டி வைரஸ் தொகுப்பு***. வைரஸ்களுக்கு எதிரான அன்ட்டி வைர்ஸ் தொகுப்பு இன்ஸ்டோல் செய்யப்படவேண்டும். கட்டணம் செலுத்தி வாங்கியிருந்தால் அவற்றின் CD கொண்டு பதிந்துவிட்டு பின் அதனை உடனே அப்டேட் செய்திட வேண்டும். இலவசமாக டவுண்ட்லோட் செய்திருந்தால் அந்தப் புரோகிராமினை கொப்பி செய்து அல்லது CDயில் இருந்தவாறே இன்ஸ்டோல் செய்திட வேண்டும்.

ஆ) ***பயர்வோல்***: உங்கள் கணனிக்குள் நுழைய முயற்சிக்கும் கெடுதல் விளைவிக்கும் பைல்களைகத் தடுத்து நிறுத்தும் சொப்ட்வெயர் அல்லது ஹார்ட்வெயர் சாதனமே பயர்வோல். தொடர்ந்து பிராட்பாண்ட் இணைப்பில் உங்கள் கணனி இருக்கப் போகிறது என்றால் இந்த பயர்வோல் கட்டாயம் தேவை. விண்டோஸ் சேர்வீஸ் பேக் 2 தரும் பயர்வோல் இந்தத் தேவையை நிறைவேற்றும் என்றாலும் பல இலவச பயர்வோல் தொகுப்புகள் இணையத்தில் கிடைக்கின்றன. அவற்றை நிறுவலாம்.

இ) ***ஸ்பைவெயர் பாதுகாப்பு:*** உங்கள் கணனியில் உள்ள பேர்சனல் தகவல்களைத் திருடி அதன் மூலம் உங்கள் பணத்தைக் கறக்கும் புரோகிராம்கள் அடிக்கடி இன்டர்நெட் இணைப்பில் இருக்கும்போது வரலாம். இதனைத் தடுத்து நிறுத்த ஸ்பைவெயர் பாதுகாப்பு புரோகிராம்கள் தேவை. இவையும் இலவசமாகக் கிடைக்கின்றன. மேலும் எக்ஸ்பி அல்லது விஸ்டா ஒப்பரேட்டிங் சிஸ்டம் வைத்திருப்பவர்கள் அவற்றிற்கான அப்டேட் பேட்ச் பைல்களை உடனடியாகப் பெற்று இணைக்க வேண்டும்.ஏனென்றால் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்திடும் பணியை இந்த பேட்ச் பைல்கள் மேற்கொள்கின்றன. இவற்றை இணைக்காவிட்டால் நம் கணனியாரும் நுழையும் திறந்த வீடாக மாறிவிடும்.

### யூசர் எக்கவுண்ட் ஏற்படுத்தி அட்மினிஸ்ட்ரேட்டரைப் பாதுகாக்கவும்

நீங்கள் வாங்கிய புதிய கணனி ஏற்கனவே ஒப்பரேட்டிங் சிஸ்டம் பதியப்பட்டிருக்கலாம். அநேகமாக அது அட்மினிஸ்ட்ரேட்டர் எக்கவுண்ட்டாக இருக்கும். மற்றவர்கள் அதனைப் பயன்படுத்தக்கூடாது.எனவே அதனைப் பாஸ்வேர்ட் கொடுத்து பாதுகாத்துவிட்டு மற்றவர்கள் மற்றும் உங்கள் வீட்டில் உள்ள குழந்தைகள் பயன்படுத்த சில யூசர் எக்கவுண்ட்களை ஏற்படுத்தி வைக்கவும். இதன்மூலம் உங்கள் கணனியை பயன்படுத்தும் மற்றவர்கள் உங்கள் சிஸ்டத்தில் தேவையற்ற மாறுதல்களை ஏற்படுத்துவதைத் தடுக்கலாம்.

### கூடுதல் பயர்வோல் பாதுகாப்பு

விண்டோஸ் அல்லது சொப்ட்வெயர் பயர்வோல் பாதுகாப்புடன் ரௌட்டர் அல்லது ஹார்ட்வெயர் பயர்வோல் ஒன்றையும் கூடுதலாக ஏற்படுத்தலாம். இவை ஒப்பரேட்டிங் சிஸ்டத்துடன் வரும் ஹார்ட்வெயர் பாதுகாப்பினைக் காட்டிலும் கூடுதலான பாதுகாப்பினை ஏற்படுத்தித் தரும்.இரண்டு வகைப் பாதுகாப்பும் இணைந்தே செயல்படும்.

என்ன! புதிய கணனி வாங்கி உடனே பயன்படுத்தலாம் என்று முனைந்தால் இவ்வளவு வேலை பார்க்கவேண்டுமா என்று சலித்துக் கொள்கிறீர்களா! ஆம், பார்த்துத்தான் ஆக வேண்டும். இல்லை என்றால் என்றும் தொல்லை தரும் அனுபவமாக உங்கள் கணனி பயன்பாடு இருக்கும் பரவாயில்லையா?

# BLOGS அமைக்க உதவி வேண்டுமா?

இணைய உலகில் அவர்களுக்கென்று தனி வலைமனைகளை அமைத்துத் தங்கள் கருத்துக்களை வெளியிடுவது இன்றைய வாழ்க்கையின் ஒரு பரிமாணமாக அமைந்து விட்டது.

BLOGS என அழைக்கப்படும் இந்த வலைமனைகள் அமைப்பதும், பராமரிப்பதும் அவற்றின் கருத்துக்களை எழுதுவதும், நண்பர்களுக்கு அவை குறித்த தகவல்களை அனுப்புவதும் மிகவும் எளிதான செயல்களாக இன்று மாறிவிட்டன.

BLOGS உருவாக்குவதில் நண்பர்களிடையே நலமான போட்டியும் நிலவுகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய பிளாக் மிகச் சிறப்பாக இருக்கவேண்டும் என அதற்குப் பல வழிகளில் முயற்சிக்கின்றனர்.

இவர்களுக்கு உதவுவதற்கென்றே பல தளங்கள் அதற்கான புரோகிராம்களை வழங்குகின்றன. அவற்றில் மிகச் சிறந்ததாக உள்ளது. http://www.allblogtools.com/ என்ற முகவரியில் உள்ள தளமாகும்.


இந்தத் தளத்தில் நுழைந்தவுடன் நம்மை ஆச்சிரியத்திலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்துவது இதன் பலவகையான டூல்ஸ்கள் தான். டூல்ஸ், டிரிக்ஸ் மற்றும் தகவல்கள் என பல வகைகளில் ஒரு பிளாக் அமைக்கத் தேவையான அனைத்தும் கிடைக்கின்றன.

இரண்டு வகைகளில் இவற்றைத் தேடிப் பெறலாம்.பக்கவாட்டில் ஒரு மெனு தரப்பட்டுள்ளது. அத்துடன் புளு நேவிகேஷன் மெனு ஒன்றும் தரப்பட்டுள்ளது.

புளு நேவிகேஷன் மெனுவில் கிடைக்கும் வகைகள் இங்கு பட்டியலிடப்படுகின்றன.

**Blogger Templates:** இங்கு தான் நம் பிளாக்குகளை அமைக்க அடிப்படை கட்டமைப்பு கிடைக்கிறது. எந்தவகை, என்ன அமைப்பு மற்றும் வண்ணங்களைத் தேர்ந்தெடுத்து அமைக்கலாம். கீழே இருக்கும் எண்கள் பக்கங்களைக் குறிக்கின்றன. இவற்றின் மூலம் பல பக்கங்களில் உள்ள டெம்ப்ளேட்டுக் களைக் காணலாம்.

ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்தவுடன் அதனை கிளிக் செய்தால் அதனை முழுமையாகப் பெற லிங்க் ஒன்று கிடைக்கும்.(கூகுள் விளம்பர பாப் அப்களும் கிடைக்கும். அவற்றைத் தள்ளிவிடுங்கள்) இந்த லிங்க்கின் கிளிக் செய்தால் மிக அழகான வடிவமைக்கப்பட்ட டெம்ப்ளேட்டுக்கள் இலவசமாக டவுண்லோட் செய்திடக் கிடைக்கின்றன. இவற்றைப் பயன்படுத்த எந்தவிதமான தடையும் இல்லை.




**Blogger Tricks:** இந்தப் பிரிவில் உங்கள் வலை மனையை வெற்றிகரமான ஒன்றாக அமைக்கத் தேவை யான ட்ரிக்குகள் கிடைக்கின்றன. பல வகைகளில் இவை வகைப்படுத்தப்பட்டு கிடைப்பது நம் வேலை யை எளிதாக்குகின்றன.

**Blogger Tools:** இதில் நான்கு வகையான டூல்ஸ் தரப்பட்டுள் ளன. அவை glitter generator,a signature generator, a static image generator மற்றும் a HTML color code generator ஆகும். இவை அனைத்தையும் நாம் கட்டாயம் பயன்படுத்தவேண்டும் என்பதில்லை. ஆனால் பிளாக்குகளை வண்ணமயமாக்க உதவும் HTML color code generator மிகவும் பயனுள்ள ஒரு சாதனம். பெரிய அளவில் இதனை நாம் பயன்படுத்தலாம்.

**Blogger Falling Objects:** உங்கள் பிளாக்கில் நட்சத்திரங்கள், காதல் அடையாளச் சின்னங்கள் பின்னணியில் விழுவதுபோல் அமைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறீர்களா ! உங்கள் எண்ணத்திற்குத் தீனி போடும் வகையில் இந்தப் பிரிவு வடிவமைக்கப் பட்டுள்ளது.இதனைக் கட்டாயம் உங்கள் பிளாக்குகளில் அமைக்கவேண்டும் என்பதில்லை. ஆனால் இவற்றை எப்படி உருவாக்கலாம் என்பதை இந்தப் பிரிவில் இருந்து கற்றுக்கொள்ளலாம்.

**Glitters:** இந்த பிரிவில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட மின்னும் இமேஜஸ் கிடைக்கின்றன. தேவைப்பட்டால் எடுத்து பிளாக்கில் இணைத்துக் கொள்ளலாம்.

**Animations:** அனிமேஷன் எனப்படும் சிறிய அசையும் உருவங்கள் உங்கள் வலை மனையில் அமைக்க வேண்டும் என ஆசைப் பட்டால் இந்தப் பிரிவு உங்களுக்கு நிறைய அனிமேஷன் பைல்களைத் (GIF) தருகிறது.

மேலே தரப்பட்டுள்ள குறிப்புகள் அதன் பிரிவு களைச் சார்ந்தே தரப்பட்டுள்ளன. இந்தத் தளத்திற்குச் சென்றால் இன்னும் என்னவெல்லாம் கிடைக்கின்றன என்பதனைத் தெரிந்து கொள் வீர்கள்.

இங்கு சென்று வந்த பின் இதுவரை வலை மனை அமைக்காதவர்கள் இதன் எளிதான சாதனங்களைப் பெற்று அமைக்கத் தொடங்கி விடுவார்கள். ஏற்கனவே அமைத்தவர்கள் தங்கள் பிளாக்குகளுக்கு் மெருகூட்டுவார்கள் என்பது உறுதி.

# ஒரு சின்ன வேடிக்கை

எந்நேரமும் புரோகிராம் மற்றும் அதற்கான டிப்ஸ் என படித்து அவற்றை கணனி அமைத்துப் பார்த்து சரி செய்து கொண்டிருக்கின்றீர்களா? இதோ ஜஸ்ட் ரிலாக்ஸ் செய்திட ஒரு குறிப்பு தருகிறோம்.

கீழே உள்ள வரியினை அப்படியே எழுத்துப் பிசகாமல் பிரவுசரில் டைப் செய்திடவும்.

```
javascript:function Shw (n) {if (self. move By){for (i=35; i>o; i-) {for (j=n;j>o;j-) {self.moveBy (1,i); self. moveBy (i,o); self.moveBy (o,i); self.moveBy (i,o);}}}} Show (6)
```

பின் மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு என்டர் அழுத்துங்கள். உங்கள் மொனிட்டர் திரை உள்ளுக்குள்ளாகவே நடுங்கி ஓர் ஓரமாகச் செல்வதனைக் காணலாம்.

பிரவுசரின் விண்டோ தான் அவ்வாறு செல்லும். இந்த வரியில் i=35 என்று இருக்கிறதல்லவா? அந்த மதிப்பை இன்னும் சற்று அதிகப்படுத்துங்கள். நடுக்கமும் அதிகமாகும்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இதனை இயக்கிப் பார்க்க உங்கள் பிரவுசர் இன்டர்நெட் இணைப்பில் இருக்க வேண்டியதில்லை.

ஒப் லைனில் கூட இதனை மேற்கொள் ளலாம்.

# அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதற்கு எதிராக இலங்கைத் தமிழர் கனடா உச்ச நீதிமன்றில் முறையீடு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்டவர் என்ற குற்றச்சாட்டின்பேரில் கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்த இலங்கையர் ஒருவர் நாடு கடத்தல் உத்தரவு தொடர்பாக மேன்முறையீடு செய்ய முயற்சிப்பதாக மிஸ்ஸிஸ்சாகா செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கனடாவின் உச்ச நீதிமன்றத்தில் நாடு கடத்தல் தீர்ப்புக்கு மேன்முறையீட்டு மனுத் தாக்குதலுக்கு மயில்வாகனம் ரமணன் என்பவர் முயற்சிப்பதை கனேடிய நீதியரசர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரிப்பதா என்பது தொடர்பாக உச்ச நீதிமன்றம் தீர்மானிக்கவுள்ளது.

கனடாவில் மயில்வாக னம் தங்கியிருப்பதற்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பமாகவுள்ளது.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்குத் தான் உதவுவதை மயில்வாகனம் அறிந்திருந்ததாக ஒன்ராறியோவின் மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் தெரிவித்திருந்தது.

சமஷ்டி நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பை மேன் முறையீட்டு நீதிமன்றம் உறுதிப்படுத்தியிருந்தது.

1992 இல் இலங்கையிலிருந்து கனடாவுக்குச் சென்ற மயில்வாகனம் வோட்டர் லூபல் கலைக்கழக கணனி பொறியியல் துறை மாண வராகும்.

2006ஆகஸ்டில் அவர் அமெரிக்க அதிகாரிகளின் கோரிக்கையின் பேரில் கைது செய்யப்பட்டார்.

ஒரு மாதத்தின் பின் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் பல்கலைக் கழகத்துக்குச் சென்று தமது முதுமாணி கற்கை நெறியைத் தொடர்ந்தார்.

2004இல் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவராகவும் அவர் இருந்துள்ளார்.

(ச-5)

# கொடுப்பனவுகள் கிடைக்காததால் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகும் உணவு விநியோகஸ்தர்கள்

(கொழும்பு)

வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களுக்கு உணவு விநியோகஸ்த்தர்கள் அரசிடம் இருந்து கிடைக்க வேண்டிய 50 கோடி ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்காக சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா முகாம்களில் உள்ள மூன்று இலட்சம் பேருக்குமான உணவுப் பொருட்களின் விநியோகத்தை மேற்கொள்வதற்காக 105 விநியோகஸ்தர்களுடன் அரசு உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது. இதன்படி முகாமில் உள்ள ஒருவருக்கு ஒரு நாளுக்கான மூன்று வேளை உணவுக்குமாக 130 ரூபாவை வழங்குவதற்கு அரசு உடன்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் இதனை 100 ரூபாவாகக் குறைக்கப்போவதாக அரசு பின்னர் தெரிவித்தது.

இது தொடர்பாக உணவு விநியோகஸ்த்தர்களுடன் ஆறு தடவைக்கு மேல் அதிகாரிகள் பேச்சு நடத்தியிருக்கின்றனர். இருந்தபோதிலும் பெப்ரவரிக்குப் பின்னர் இவர்களுக்கான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் கடந்த வாரம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திய உணவு விநியோகஸ்த்தர்கள் கடந்த வாரத்தில் இருந்து உணவுப் பொருட்களின் விநியோகத்தையும் நிறுத்திவிட்டனர்.

இருந்தபோதிலும் இவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியுள்ள ஐந்து கோடி ரூபாவையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதனையும் அரசு மேற்கொள்ளாததையடுத்து தற்போது அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உணவு விநியோகஸ் தர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-6)

# வடக்கு, கிழக்கில் புதியதொழிலாளர் காரியாலயங்களை நிறுவ நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் புதிய தொழிலாளர் காரியாலயங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தொழில் உறவு மற்றும் மனித வள அமைச்சின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த காரியாலயங்கள் நிர்மாணிக்கப்படவிருப்பதாக இவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தொழிலாளர் காரியாலயங்களை ஸ்தாபிப்பதற்காக 21 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கு சர்வதேச தொழிலாளர் ஒழுங்கமைப்பு பங்களிப்பும் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14)





சுப்றா கல்வி நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவில் நிறுவன இயக்குநர் ச.ஐங்கரன் உரையாற்றுவதையும் மேடையில் நல்லை ஆதீன முதல்வர் ,தென்னிந்திய திருச்சபை வணபிதா ஜோசுவ அடிகள்,வண பிதா அன்ரனி அடிகள், சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் மகாதேவன் ,இளைப்பாறிய அதிபர் ஞானசுந்தரமூர்த்தி ,ஆங்கில ஆசிரியர் திருக்குமரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



தேசிய உணவு வார நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னிட்டு உணவு உற்பத்தியையும் நுகர்வையும் ஊக்குவிக்கும் முகமாக மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் வீட்டுத்தோட்ட அமைத்தலும் ,பராமரித்தலும் தொடர்பான பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் கரவெட்டி விவசாய போதனாசிரியர் பயனாளி ஒருவருக்கு உள்ளீடுகள் வழங்குவதை படத்தில் காணலாம்.



அரசறிவியல் ஒன்றியத்தினால் நடாத்தப்படும் மாதாந்த கருத்தரங்குத்தொடரில் கடந்த மாதம் நடைபெற்ற கருத்தரங்கில் வாழ்க்கையை வெல்வதா ? வாழ்க்கை வெல்வதா ? என்ற தலைப்பில் யாழ். போதனாவைத்தியசாலையின் உளவளத் துணையாளர் நா.நவராஜ் கருத்துரை வழங்குவதனையும் கலந்து கொண்ட மாணவர்களினையும் படத்தில் காணலாம்.



மானிப்பாய் விவேகானந்த வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் திருமதி கமலா தேவி சரவணபவன் ,வலிகாம வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# மூளை இரத்தக்கசிவிற்கு புதிய சிகிச்சை

## மதுரை டாக்டர்கள் சாதனை

(மதுரை)

மதுரை வடமலையான் மருத்துவமனையில், மூளை இரத்தக்கசிவால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு அறுவை சிகிச்சையின்றி, ''எஸ்.ஏ.எச்.அனுரிசம் என்டோவாஸ்குலர் காயிலிங்' சிகிச்சை அளித்து டாக்டர்கள் சாதனை படைத்தனர்.

மதுரையைச் சேர்ந்தவர் பாலசுப்பிரமணியம் (79), மயக்கம், தலைவலி, வாந்தி, தள்ளாடுதல், நினைவு பிறழ்தல் போன்ற பிரச்சினைகளுடன் இந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார்.

டாக்டர்கள் சோதித்ததில், மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. வழக்கமாக அறுவை சிகிச்சை மூலம் இது சரி செய்யப்படும். மிகவும் கடினமான மற்றும் ஆபத்தான இந்த அறுவை சிகிச்சையில் இரத்த நாளத்தில் ஏற்பட்டிருக்கும் கிழிசலை சரி செய்து தையல் போடப்படும்.

அறுவை சிகிச்சைக்குப் பதிலாக, "எஸ்.ஏ.எச் அனுரிசம் என்டோவாஸ்குலர் காயிலிங்'' என்ற புதிய முறையில் நோயாளி பாலசுப்பிரமணியத்துக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

நரம்பியல் டாக்டர் ஜஸ்டின், ''இந்த சிகிச்சை முறையில் தொடையில் உள்ள இரத்த நாளத்தின் மூலம் ஒரு குழாய் மூளையில் உள்ள இரத்த நாளத்திற்கு அனுப்பப்பட்டது. இதன் வழியாக பிளாட்டின கம்பிகள் அனுப்பப்பட்டு, அனுரிசம் என்ற இரத்த நாளத்தில் ஏற்பட்ட கிழிசல் சரி செய்யப்பட்டது.

தற்போது நோயாளி நல்ல நிலையில் உள்ளார். தென் மாவட்ட அளவில் முதல் முறையாக இந்த சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது'' என்றார். (ஓ-6)

# இங்கிலாந்தில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை 23 இலட்சமாக உயர்வு

(லண்டன்)

இங்கிலாந்தில் வேலை இல்லாமல் திண்டாடுபவர்களின் எண்ணிக்கை கடந்த பெப்ரவரி மாதம் 2 இலட்சத்து 81 ஆயிரம் ஆக இருந்தது. அது அடுத்த 3 மாதங்களில் 23 இலட்சமாக உயர்ந்தது.

ஒரு ஆண்டுக்கும் மேலாக வேலை இல்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்தில் இருந்து 5 இலட்சத்து 28 ஆயிரமாக உயர்ந்தது.

இது கடந்த 11 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு உயர்வு ஆகும். பொருளாதார




இது கடந்த 16 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு அதிகரித்து இருக்கிறது. அதிலும் குறிப்பாக இளைஞர்களிடம் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது.

நிலையில் முன்னேற்றம் ஏற்படாத வரை வேலை இல்லாமல் தவிப்பவர்கள் எண்ணிக்கை குறைய மாட்டாது என்று கூறப்படுகிறது. (ஓ-6)

# திருமண உறவு நிலைபெற காதல் மட்டும் போதாது

## ஆராய்ச்சியாளர் தெரிவிப்பு



திருமண வாழ்வு நீடித்து நிலைபெற காதல் மட்டும் போதாது என அவுஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்களின் புதிய ஆராய்ச்சி ஆய்வொன்று கூறுகின்றது.

காதலுக்கு அப்பால் ஒரு ஜோடியின் வயது, முன்னாள் காதல் தொடர்புகள் மற்றும் புகைப்பிடித்தல், மதுபான பாவனை போன்ற பழக்க வழக்கங்கள் என்பனவும் திருமண உறவுகள் நீடிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன என அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஒன்றாக இணைந்து வாழும் சுமார் 2 ஆயிரத்து 500 தம்பதியினரையும் கணிசமான விவாகரத்து பெற்ற அல்லது பிரிந்து வாழும் ஜோடிகளையும் உள்ளடக்கி இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

25 வயதுக்கு முன் திருமண பந்தத்தில் இணைந்த கணவர்மாரும் தமது மனைவியை விட 9 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய கணவர்மாரும் விவாகரத்து செய்து கொள்வது, ஏனைய கணவர்கமார்களை விட இரு மடங்கு அதிகமாக உள்ளது என இந்த ஆய்வில் கண்டறியப்பட்டது.

மேலும் நீடித்த திருமண வாழ்க்கயில் பிள்ளைகளும் பெரிதும் செல்வாக்கு செலுத்துவதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய திருமணத்தின் மூலம் மட்டுமே பிள்ளை பெற்றவர்கள் மற்றும் பிள்ளை அற்றவர்கள் என்பவர்களுடன் ஒப்பிடுகையில் முந்திய திருமணம் அல்லது திருமணத்துக்கு முன்னரான உறவு என்பவற்றின் மூலம் பிள்ளைகளைப் பெற்றவர்கள் அதிகளவில் விவாகரத்து செய்து கொள்வதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

அத்துடன் தமது வாழ்க்கைத் துணையை விட அதிகளவு பிள்ளைகளை பெற்றுக் கொள்ள பெண்கள் விரும்பும் குடும்பங்களிலும் பெருமளவு விவாகரத்துகள் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது. விவாகரத்துச் செய்து கொண்ட பெற்றோரைக் கொண்ட ஜோடிகளும் விவாகரத்து செய்வது அதிகமாகவுள்ளது. (ஓ-6)

# அமெரிக்காவுக்கு எதிராக ஒன்று சேர

## அல் - கொய்தா தலைவர் அழைப்பு

(துபாய்)



அமெரிக்காவுக்கு எதிராக ஒன்று திரளும்படி அல் - குவைதா அமைப்பின் மற்றொரு தலைவரான அய்மான் அல் - ஜவாஹிரி அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச பயங்கரவாதியான ஓசாமா, அல் - குவைதா அமைப்பின் தலைவர் இந்த அமைப்பின் மற்றொரு முக்கிய தலைவர் ஜவாஹிரி கூறுகையில்,

பாகிஸ்தானின் அரசியலிலும் இராணுவத்திலும் அமெரிக்காவின் தலையீடு அதிகம் உள்ளது. அணு ஆயுதத்தை வைத்துள்ள பாகிஸ்தானில் பிளவை உண்டாக்க அமெரிக்கா முயற்சிக்கிறது.

அமெரிக்காவுக்கு எதிராக போராடி வரும் முஜாகிதீன்களுக்கு நாம் ஆதரவளிக்காவிட்டால் பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் அழிந்து விடும். அதுமட்டுமல்லாது, அல்லாவின் தண்டனைக்கு நாம் ஆளாவோம்.

ஜிகாத்துகளை வேரறுக்க நினைக்கும் அமெரிக்காவுக்கு எதிராக ஒவ்வொரு பாகிஸ்தானியரும் போராட வேண்டும்.

முஸ்லிம்களின் கோட்டையாக உள்ள பாகிஸ்தானை அமெரிக்க அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் ஆக்கிரமித்து வருகின்றனர். ஆப்கானிஸ்தானையும், பாகிஸ்தானையும் ஆக்கிரமித்துள்ள அமெரிக்காவுக்கு எதிராக முஸ்லிம்கள் சண்டையிட வேண்டும் என்று கூறியுள்ளார். (ஓ-6)

# மணமகளின் பூங்கொத்தால் ஏற்பட்ட விமான விபத்து

இத்தாலி நாட்டில் டஸ்கன் நகரில் ஒரு திருமணம் நடந்தது. அந்த நாட்டில் திருமணத்தின் போது, மணமகளின் கையை அலங்கரித்த பூங்கொத்தை வெளியே வீசுவது ஒரு சம்பிரதாயம் ஆகும்.

இந்த பூங்கொத்தை யார் எடுக்கிறாரோ அவருக்கு அதிர்ஷடம் என்றும், விரைவிலேயே அவருக்கு திருமணம் ஆகும் என்பதும் அந்த நாட்டு மக்களின் நம்பிக்கை ஆகும்.

இந்த சம்பிரதாயத்தில் புதுமை புகுத்த விரும்பிய புதுமணமக்கள், பூங்கொத்தை வீசும் நிகழ்ச்சிக்கு ஒரு விமானத்தை வாடகைக்கு அமர்த்தினார்கள். மணமக்களின் உறவினர் ஒருவரை விமானத்தில் அனுப்பி அதில் இருந்தபடி பூங்கொத்தை வெளியில் எறியச் செய்தனர்.

பூங்கொத்தை அவர் எறிந்தபோது, சில பூக்கள் விமானத்தின் என்ஜினில் சிக்கிக் கொண்டன. இதனால் விமானம் ஒரு இளைஞர் விடுதி மீது விழுந்தது. அதில் விமானத்தில் பயணம் செய்த 2 பேர் காயம் அடைந்தனர். விமானிக்கு லேசான காயம் ஏற்பட்டது. (ஓ-6)

# அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவுகணை ஏவி ரஷ்யா பரிசோதனை

ரஷ்யா கடந்த செவ்வாய்க்கிழமை அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றிலிருந்து ஏவுகணையொன்றை ஏவிப் பரிசோதித்ததாக ரஷ்ய இராணுவத் தலைவர் நிகொலாய் மகாரோவ் தெரிவித்தார்.

மேற்படி ஏவுகணைப் பரிசோதனையானது வெற்றிகரமானதாக அமைந்ததாகவும் தமது இலக்கு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வட துருவத்திற்கு அண்மையில் வைத்து பிரையன்ஸ் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்பட்ட மேற்படி ஏவுகணையானது சுமார் 9 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் பயணிக்கக் கூடியது என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவது தொடர்பான ஆரம்பகட்ட பரிசோதனை பூர்த்தி

(மொஸ்கோ)


செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவது தொடர்பாக நடத்தப்பட்ட பரிசோதனையின் நிமித்தம் மொஸ்கோவில் மூடிய விண்கல அமைப்பில் எதுவித வெளியுலக தொடர்பும் இல்லாத நிலையில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தங்கியிருந்த 6 ஐரோப்பியர்களும் செவ்வாய்க்கிழமை வெளியேறியுள்ளார்கள்.

செவ்வாய்க்கிரகத்துக்கான நீண்ட தனிமையான விண்வெளிப் பயணத்தின் போது விண்வெளி வீரர்களின் உடல் நிலை மற்றும் மனோநிலை எவ்வாறு அமையும் என்பதை கண்டறியும் முகமாகவே இந்த பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்த பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தில் 4 ரஷ்யர்கள், ஒரு ஜேர்மனியர், ஒரு பிரெஞ்சு நாட்டவர் ஆகியோர் பங்கேற்றனர். மேற்படி அறுவரின் உடல்நிலையும் ஆரோக்கியமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதுவித ஜன்னலும் அற்ற மேற்படி விண்கல அமைப்பானது தரையிலேயே நிலை நிறுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேரடி வெளியுலக தொடர்பு எதுவும் அற்ற நிலையில் வானொலி சமிக்ஞைகள் மூலம் அறுவரும் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஏற்பாட்டாளர்களுடன் உரையாட வசதி செய்து தரப்பட்டிருந்தது.



செவ்வாய்க்கிரகத்துக்கான நீண்ட விண்வெளிப் பயணத்தின் போது வானொலி சமிக்ஞைகள் பரிமாற்றத்தில் ஏற்படக் கூடிய கால தாமதத்தை கணிப்பிட்டு, சமிக்ஞைகள் 20 நிமிடத்துக்கும் அதிக நேரம் தாமதித்தே பரிமாறப்பட்டன.

இந்த அறுவரும் மூடிய விண்கல அமைப்பில் கழித்த 105 நாட்களானது செவ்வாய்க் கிரக பயணத்துக்கான காலத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவான காலமாகும்.

செவ்வாய்க் கிரகத்துக்கு பயணத்தை மேற்கொண்டு திரும்ப 520 நாட்களாகும் (சுமார் ஒன்றரை வருடங்கள்) என மதிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக விண்கலத்தில் ஒன்றரை வருட காலத்திற்கு பிறிதொரு குழுவை தங்க வைத்து பரிசோதனை செய்ய திட்டமிட்டுள்ளது. (ஓ-6)

# அன்பு, அமைதி, ஆன்மீக சக்தியின் அதிர்வலைகளைப் பரப்பும் தேசிய தியான நிகழ்ச்சித் திட்டம்

*இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்கள் வழங்கும் "நல்லாசிகளும் தூய உணர்வுகளும்" அன்பு, அமைதி, ஆன்மீக சக்தியின் உணர்வலைகளை பரப்பும் தேசிய தியான ஆரம்ப நிகழ்ச்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணி முதல் 6 மணிவரை யாழ்.இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

யுத்தம் ஓய்ந்து விட்டது. எங்கள் தேசமும் அதன் மக்களும் உணர்ச்சிகரமான சூழலின் தாக்கத்தைக் கண்மூடித்தனமாக அப்படியே தங்களுக்குள் உள்வாங்கிய நிலையில் இருக்கிறார்கள். இவ்வகையில் மக்களின் வலிமை நலிந்து போய் விட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உளவியல் தாக்கம் என்பது இனிவரும் பல வருடங்களுக்கு அவர்களை விட்டு நீங்கப் போவதில்லை.

நம் வாழ்க்கையில் நெருக்கடி மிக்க சூழ்நிலைகள் எழும்போது ஒரு கட்டத்திற்கு மேல் உள்ளூர் மனம் பொங்கிக் கொதித்தெழுகிறது. அந்தக் கணத்தில் எங்கள் உள்ளக் கொதிப்பை வார்த்தைகளிலும், செயல்களிலும் வெளிப்படுத்தி விடுகின்றோம். இச்செயற்பாடு அளவிட முடியாத சேதத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

மனதை விலக்கி நடப்பதை அவதானிக்கும் திறனையும் கலையையும் பழகிக் கொள்வதே தற்போதைய காலகட்டத்தில் மக்கள் தேவையாக இருக்கின்றது. இதன் மூலம் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு சமூக, தொழில்ரீதியிலும், உளவியல், உணர்ச்சி பூர்வ ரீதியிலும் அவசியமாகக் கருதப்படும் ஒருவருக்கொருவர் மத்தியில் நிலவும் உறவுகளைப் பற்றியும் தன்னைப் பற்றியும் அறிந்து கொள்ளச் செய்யும்.

2009 மே மாதம் 31 ஆம் திகதி தெகிவளையில் இல.55, பீற்றர்ஸ் லேனில் அமைந்துள்ள ஹாமணி மண்டபத்தில் "நல்லாசிகளும் தூய உணர்வுகளும்" அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இத்தேசிய தியான நிகழ்ச்சித் திட்டம் இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டது.

அன்றிலிருந்து இந்நிகழ்ச்சிகளைப் பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையங்கள் நாட்டின் பல பாகங்களிலும் நடாத்தி வருகின்றன. அவ்வகையில், நாளை மறுநாள் மாலை 3 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் பொது மக்களின் நன்மை கருதி நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்காக கொழும்பிலிருந்து இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களின் தேசியப் பொறுப்பாளர் இராஜயோகி பிரம்மகுமார் ஜெகதீஸா வருகை தரவுள்ளார்.

மலேஷியாவைச் சேர்ந்த இராஜயோகி பிரம்மகுமார் ஜெகதீஸா கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக இராஜ யோக தியானத்தைப் பயிற்சி செய்து வருபவர் மட்டுமல்லாது கடந்த பதினேழு வருடங்களுக்கு மேலாக இலங்கை மக்களுக்கு ஆன்மீக சேவையாற்றி வருபவரும் ஆவார்.

யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் போன்ற பேரழிவுகளால் ஏற்படும் இழப்புக்களைச் சீர் செய்து, அவற்றை மீள ஒழுங்குபடுத்தும் மீட்பு நிவாரணப் பணிகளில் பிரம்ம குமாரிகள் நிறுவனம் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இன்று மனிதர்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களைத் தக்க முறையில் கையாள்வதற்கு பல விளைவுகளைத் தரக்கூடியதும் ஒன்றையொன்று அனுசரித்துச் செல்லக்கூடியதுமான முறையான அணுகுமுறையே உகந்ததாக விளங்குவதை பிரம்ம குமாரிகள் நிறுவனம் கண்டறிந்திருக்கின்றது.

## நல்லாசிகளும் தூய உணர்வுகளும்

நல்லாசிகளும், தூய உணர்வுகளும் என்பது, எண்ணங்கள் மூலமாகப் பரப்பப்படும் நாடளாவியதோர் தியான நிகழ்ச்சித் திட்டமாகும். இத்திட்டத்தின் பிரகாரம், இலங்கையில் மனதளவிலும் உடலளவிலும் வலியையும் வேதனைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைவரும் அன்பும் அமைதியும் சக்தியும் நிறைந்த சக்தி வாய்ந்த அதிர்வலைகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

தற்போதைய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வகையில் மக்கள் தங்கள் மனப்பாங்கையும் குணத்தையும் மறுசீரமைத்துக் கொள்ள "நல்லாசிகளும் தூய உணர்வுகளும்" உதவி செய்யும். இதில் பங்கேற்பவர்களுக்கும் அது பின்வரும் வழிகளில் அற்புதமானதோர் வாய்ப்பை அளிக்கின்றது.

- ஆத்மாவின் ஆன்மீக பலத்தை வெளிப்படுத்தி, சக்தியூட்டுவதன் மூலமாக அவர்களது சொந்த வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குதல்.
- அழுத்தம், விரக்தி, பாதுகாப்பின்மை போன்றவற்றிலிருந்து விடுபடுவதற்கு உதவும் புராதன தியான வழிமுறைகளைக் கற்றுக்கொள்ளல்.
- நல்ல முறையிலான அணுகுமுறையை எங் களுக்குள் வளர்க்கும் வகையில் குணாதிசய மாற்றமொன்றை ஏற்படுத்தல்.
- எண்ணங்களின் தரத்தைப் பேணுவதற்கும், சரியான மனோ நிலையை வளர்த்தெடுப்பதற்கும் உதவும் பல்வேறு வழிமுறைகளை அறிந்து கொள்ளல்.
- விலகி நின்றவாறே அருளும் கலையைக் கற்றுக் கொள்ளல்.

மனிதனாக இருப்பதென்றால் என்னவென்று மீண்டும் கண்டறிவோம். எங்கள் ஆன்மீக வளர்ச்சியே ஒழுங்கு தவறாத தியானத்தால் எங்களில் ஏற்படும் மிக ஆழமான தாக்கமாகும். தியானம் எங்கள் உண்மையான ஆன்மீக நிலையுடன் எங்களை மீண்டும் சம்பந்தப்படுத்தி வைக்கிறது. இதன் விளைவு ஆழ்ந்த அக அமைதியும் அதிகரிக்கப்பட்ட மன வலிமையும், தெளிவான நோக்கமுமே. இவ்வகையில் அனைவருக்குமே நல்லாசிகளையும் தூய உணர்வுகளையும் தானம் செய்யக்கூடியவர்களாக ஆகுகின்றோம்.

குழுவாகச் சேர்ந்து செய்யப்படும் தியானமானது, தனியாகச் செய்யப்படும் தியானப் பயிற்சியை விடவும் பெருமளவு நன்மையைப் பெற்றுத் தருகின்றது. வினைத்திறன் மிக்க தியானம் மனதிற்கு ஒருவித சுதந்திரத்தை அளிக்கின்றது. இவ்வகையில் குழுத் தியானம் சிரமமானவற்றை இலகுவாக்கி, தியானம் செய்பவர்களுக்கு ஒரு ஆதாரமாகவும் இருக்கிறது. அத்துடன், ஆரோக்கியமான ஒரு மாற்று வழியைப் பயன்படுத்தி அதன் மூலம் சிக்கலான பழக்கவழக்கங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன.

வேறுபட்ட ஆளுமைகள், கலாசாரங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றைக் கொண்டவர்கள், கூட்டாக இணைந்து தியானம் செய்யும் போது குழுத்தியானத்தால் உருவாகும் மௌனத்தின் சக்தி அவர்களுக்குப் பொதுச் சூழல் ஒன்றை உருவாக்கிக் கொடுக்கிறது. ஒரே நோக்கத்தைக் கொண்ட ஆன்மீக சமுதாயம் என்ற வகையில் சக்தி பெறுதல் எனும் மூலாதாரத்தை எங்களுக்குள் தட்டியெழுப்பி, அதனை மற்றவர்களுக்கும் பரப்புகின்றோம். வார்த்தைகளின்றி, தொடர்புகள் இணைக்கப்பட்டு, உறவு முறைகள் ஆழமாக்கப்படுகின்றன. குழுக்கள் விருத்தியடைந்து சமுதாயமாக உருவாக அதன் அங்கத்தவர்களால் தனிப்பட்ட முறையில் செய்யப்படும் தியானத்தை விடவும், கூட்டுத்தியானம் பாரியளவில் உதவுகின்றது.




## தென்மராட்சியில் குரங்குகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

யாழ். மாவட்டத்தின் "குழைக்காடு" என எல்லோராலும் அழைக்கப்படுவதும் முக்கனிகளுக்குப் பெயர் பெற்ற இடமுமான தென்மராட்சியின் முக்கனி வளம் இப்போது குரங்குகளின் கையில் சிக்கியுள்ளது. தென்மராட்சியில் புகழ்பெற்ற மாமரச் செய்கை இப்போது அருகிப்போய்க் கொண்டிருப்பதை எல்லோரும் காணக்கூடியதாக உள்ளது. அது மட்டுமல்லாது மரக்கறிப் பயிர்கள் முருங்கை, கத்தரி மற்றும் பழப் பயிர்களான தோடை, மாதுளை போன்றவற்றின் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் முன்னர் எங்குமே காணமுடியாத குரங்குகளின் தொல்லையை இப்போது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவு அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த யாருமே முன்வரமாட்டார்களா? இப்பகுதியிலுள்ள வளர்ப்பு மிருகங்களைவிட அதிகளவில் பெருக்கமடைந்து காணப்படுவது குரங்குகளாகும். யாராலும் இலகுவில் விரட்ட முடியாது அதிலும் பெண்களால் அறவே விரட்ட முடியாது. ஒரு காலத்திலே யாழ்ப்பாணத்து மாம்பழம் என கொழும்பிலே பெயர் போன மாம்பழம் இன்று என்ன ஆச்சு!

நடைபெற்று முடிந்த கோர யுத்தத்தின் நுழைவாயில் தென்மராட்சியாகும். 2000 ஆம் ஆண்டிலும் 2006 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட யுத்த முனைப்புக்களின் போது பிரதேசத்தின் பல அடிப்படை வளங்கள் முற்றாக அழிந்து போயின. மேலும் 2006இல் A-9 வீதி தடைப்பட்ட பின்னர் மா, பலா போன்ற பயன்தரு கனிமரங்கள் குடாநாட்டின் விறகுத் தேவைக்காக தறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றை மக்கள் தறிப்பதற்கான அடிப்படைக் காரணம் குரங்குகளின் அட்டகாசமாகும். வீடுகளுக்கு அண்மையாக மரங்கள் நிற்பதால் குரங்குகள் மாங்காய்களை அழிப்பது மட்டுமல்லாமல் வீட்டுக் கூரை ஓடுகளையும் சேதப்படுத்துகின்றன.

இதன் காரணமாக பல வீட்டு உரிமையாளர்கள் மரங்களைத் தறிப்பதில் முனைப்பாக இருக்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக அண்மையில் ஏற்பட்ட நிஷா புயலிலும் பல கனிமரங்கள் வேரோடு சாய்ந்து விட்டன. இவ்வாறு மரங்கள் தறிக்கப்படுவதால் சூழல் மாசடைவதோடு இயற்கைச் சமநிலையும் பாதிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது.

அரச உயர் அதிகாரிகளே, விவசாயப் பகுதி அதிகாரிகளே தென்மராட்சியில் குரங்குகளைக் கட்டுப்படுத்த ஏதாவது திட்டம் வகுத்து செயற்படுத்த மாட்டீர்களா? அல்லது குரங்குகளின் பெருக்கத்தைத் தன்னும் தங்களால் தடுக்க முடியாதா? சிந்தியுங்கள் செயற்படுவோம். தவறுவோமானால் குடாநாட்டின் கனிவளமான மா, பலா போன்றவை அறவே அழியும் நிலையை நாம் கைகட்டி வாய்மூடி பார்த்துக் கொண்டு நின்றவர்களாகி விடுவதுடன் அடுத்த சந்ததிக்கு கனிமரங்கள் இல்லாத ஒரு பிரதேசமாக இப்பிரதேசம் காட்சியளிக்கும் என்பது நிச்சயம்.

தங்கள் உண்மையுள்ள,
தென்மராட்சி வாழ் மக்கள் சார்பாக
க. வேலுப்பிள்ளை.

# புல்மோட்டை நலன்புரி நிலைய மக்களை உறவினர் பார்வையிட ஏற்பாடு

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)



வடக்கில் நிலவிய யுத்த சூழ்நிலையின் போது வன்னியிலிருந்து கடல் வழியாக புல் மோட்டைக்கு வந்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிட ஏற்பாடு கள் செய்யப்படும் என அனர்த்த நிவாரண மற்றும் மீள் குடியேற்றத்துறை அமைச்சர் றிசாத் பதியுதின் தெரிவித்துள்ளார்.

புல்மோட்டையிலுள்ள நலன்புரி நிலை யங்களில் தங்கியிருப்பவர்களை உறவினர்கள் பார்வையிட தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்படுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து கேட்டபோது,

இந்த விடயம் தொடர்பாக தற்போது தான் எனக்கு தெரியவந்துள்ளது என்றும் வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களை உறவினர்கள் பார்வையிட அனுமதிப்பது போல் புல்மோட்டையில் தங்கியிருப்பவர்களையும் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை அரசாங்க அதிபர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அமைச்சர், புல்மோட்டையில் உள்ளவர்களை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமானது.

இதற்கென தனியான மண்டபம் ஒன்று அங்கு அமைக்கப்பட வேண்டியுள்ளது. உறவினர்கள் பார்வையிட அனுமதி மறுக்கப்படுவதென்பது கவலைக்குரிய ஒரு விடயம்.

என்ன காரணத்துக்காக அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அறிந்து அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ஓ-6)

# புத்தாண்டில் உங்கள் ஆடி மாதப் பலன்கள்

## மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் வரை)**

மற்றவர்களுடன் மகிழ்ச்சியை மட்டுமே பகிர்ந்து கொள்ளும் மேட ராசி நேயர்களே!

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் செவ்வாய் தனாதிபதியான சுக்ரனுடன் இணைந்து, தனஸ்தானத்திலேயே சஞ்சரிப்பதால் பொருளாதார வளர்ச்சி கூடும். சென்ற மாதத்தில் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்கள் இம்மாதம் மித மிஞ்சிய பொருளாதாரத்தில் மிதக்கப்போகிறார்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும் விதத்தில் கிரக நிலைகள் சாதகமாக விளங்குகின்றன. மாதத் தொடக்கத்தில் புத , ஆதித்ய யோகம் உருவாகின்றது. புத்திரஸ்தானதிபதி சூரியன் , ஆறுக்கு அதிபதியுடன் இணைந்து சஞ்சரிப்பதால் பிள்ளைகளுக்கான வேலைவாய்ப்புகள் வந்து சேரும்.

குருவின் வக்ர இயக்கம் ஆகஸ்ட் 3ஆம் திகதி முதல் தொடங்குவதால் , இக்காலத்தில் தொழில், உத்யோகம் போன்றவற்றில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமைய வக்ர வியாழனுக்கு வழிபாடுகளை முறையாகச் செய்வது நல்லது.

ராகு -கேதுக்கள் 4, 10 இல் சஞ்சரிப்பதால் செயல்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். புதியவர்களின் ஆலோசனைகளை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. பொறுப்புகள் கூடலாம். மாதக் கடைசியில் உடன் பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கு கைகொடுத்து உதவுவீர்கள் .

ஜுலை 26ஆம் திகதி மிதுனராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 2, 7க்கு அதிபதியான சுக்ரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப ஒற்றுமை கூடும். வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். தங்கம், வெள்ளி தங்கும் நேரமாக இருப்பதால் இக் காலத்தில் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள் வரவு அதிகரிக்கும்.

ஜுலை 27ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் வேலைவாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பூர்வீக சொத்து சம்பந்தமாக விற்பனை செய்ய எடுத்த முடிவில் லாபம் கிடைக்கும். உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். நடக்குமோ, நடக்காதோ என சந்தேகத்தில் இருந்த காரியம் திடீரென நடை பெற்று சந்தோஷத்தைக் கொடுக்கும் , உறவினர் வருகை அதிகரிக்கும் நேரமிது.

இதுவரை கும்பத்தில் சஞ்சரித்து வந்த வியாழனுக்கு ஆகஸ்ட் 3ஆம் திகதி முதல் மகரத்தில் சஞ்சரிக்கப்போகிறார். மகரராசியில் குரு நீசம் பெறுவதோடு வக்ரகதியிலிருந்தும் இயங்கப் போகிறார். எனவே மாபெரும் மாற்றங்கள் உங்களை வந்து சேரலாம். குறிப்பாக தொழில் செய்பவர்கள் புதிய இடமாற்றம் செய்ய நேரிடலாம். பங்கு தாரர்கள் விலக கூடிய சூழ்நிலையும் உருவாகலாம். .அதற்காக கவலைப்பட வேண்டியதில்லை. 12க்கு அதிபதி நீசம் பெறுவதால் எல்லா வழிகளிலும் நல்ல மாற்றங்களே வந்து சேரும். பயணங்கள் அதிகரிக்கும்.

ஆகஸ்ட் 16ஆம் திகதி மிதுனராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார் .எனவே, சகோதர ஒற்றுமை பலப்படும். இடம் பூமியால் இலாபம் கிடைக்கும். இம்மாதம் எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெற அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள்.

## இடபம்

**(கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி , மிருகசீரிடம் 1,2, பாதங்கள் வரை )**

**முடிவெடுக்க முடியாத பிரச்சினைகளுக்குக் கூட நல்ல முடிவைச் சொல்லும் இடபராசி நேயர்களே!**

ஆடி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது , ராசிநாதன் சுக்ரன் வலுப்பெற்றிருந்தாலும் அதோடு விரயாதிபதி செவ்வாய் இணைந்து சஞ்சரிப்பதால் வரவும் - செலவும் சமமாக இருக்கும் மாதமாக இம் மாதம் அமையலாம். எந்தக் காரியத்தையும் பணத்தை வைத்துக்கொண்டு உங்களால் செய்ய இயலாது. காரியத்தை தொடங்கி விட்டால் காசு பணம் தானே வந்து சேரும்.

குரு 10 இல் சஞ்சரித்து திடீர் மாற்றங்கள் பலவற்றை உருவாக்கியிருக்கலாம். மீண்டும் மகரத்திற்கு வக்ரமாகும். இந்த மாதத்தில் பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகலும். புதிய சொத்துப் பிரச்சினைகள் வாழ்க்கையில் ஏற்படும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தொட்ட காரியங்களில் வெற்றி பெற குரு சுக்ர வழிபாடு உங்களுக்குத் தேவை.

சூரியனோடு கேது இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். பங்காளிப் பகை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். என்ன இருந்தாலும் கிரக சேர்க்கையில் பகை கிரகங்கள் ஒன்று சேரும் பொழுது யோசித்துச் செயல்படுவது நல்லது.

ராகு -கேதுக்களின் ஆதிக்கம் வலுவடையும் நேரங்களில் சர்ப்ப சாந்திகளைச் செய்தால் சந்தோஷமான வாழ்க்கை அமையும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஜுலை 26ஆம் திகதி மிதுனராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். ராசிநாதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பொருளாதார நிலை உயரும். புதிய பொருள் சேர்க்கைகள் அதிகரிக்கும் தொழில் வளர்ச்சி மேலோங்கும் தொல்லை தந்த எதிரிகள் விலகுவர் கடன் சுமை குறைய எடுத்த முடிபுகள் வெற்றி தரும்.

சிம்மராசியில் ஜுலை 27ஆம் திகதி முதல் புதன் சஞ்சரிக்கப்போகிறார். தனாதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் வாகன யோகம் வந்து சேரும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்களை வாங்க முன்வருவீர்கள். தாய்வழி ஆதரவு பெருகும். பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

உங்கள் ராசிக்கு அஷ்டமாதிபதியாகவும் லாபாதிபதியாகவும் விளங்கும் குருபகவான் ஆகஸ்ட் 3 முதல் மகர ராசியில் நீசம் பெற்று வக்ரம் பெறப் போகிறார். எனவே *கெட்டவன் கெட்டிடில் கிட்டும் ராஜயோகம்* என்பதற்கிணங்க எதிர் பாராத திருப்பங்கள் பலவற்றையும் இந்தக் குருப் பெயர்ச்சி காலத்தில் சந்திக்கப் போகிறீர்கள். குறிப்பாக பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். உத்யோகத்தில் நினைத்த இடத்திற்கு மாறும் சூழ் நிலை உருவாகும்.

செவ்வாய் உங்கள் ராசிக்கு சப்தம விரயாதிபதியாவார். அவர் தனஸ்தானத்தில் ஆகஸ்ட் 16முதல் சஞ்சரிக்கப்போகிறார். எனவே, விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும் கடன் சுமை குறையும் பதவிகள் வந்து சேரும்.

இம் மாதம் இனிய காரியங்கள் இல்லத்தில் நடைபெற தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபடுங்கள். (தொடரும்)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினால் நல்லூர் ஆடியபாதம் வீதி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றன.

இறுதி நாளான இன்று வெள்ளிக்கிழமை *அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்*. எனும் விடயம் பற்றி சைவப்புலவர் கந்தசத்தியதாசனும் *விநாயகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட அடியார்கள்* எனும் விடயம் பற்றி மு. குமாரசாமி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளனர்.(ஓ-4)

# வடக்கு கிழக்கில் சுற்றுலாத்துறைக்குப் பொருத்தமான பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் நோக்குடன் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்குப் பொருத்தமான பிரதேசங்கள் இனங்காணப்பட்டு அவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


இங்கு அவர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது, கடந்த 30 வருட கால யுத்த முடிவின் பின்னர் வடக்குமற்றும் கிழக்கை மீளக்கட்டியெழுப்பிட நடவடிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது.

இதனோர் அங்கமாக வடக்கு மற்றும் கிழக்கில் சுற்றுலாத்துறைக்குப் பொருத்தமான பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கமைய திருகோணமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேசங்களிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள அறுகம்குடா பிரதேசத்திலும் அதி வசதிகளுடன் கூடிய ஹோட்டல்கள் அமைக்கப்படவுள்ளன.

தற்போது ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் மாலை தீவு ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை இரு மடங்காக எதிர்வரும் பருவ காலங்களில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 2010 ஆம் ஆண்டளவில் ஒரு இலட்சம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கை வருவர். இவர்களை கவரும் பொருட்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள உல்லாசப் பயணிகளைக் கவரும் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும். (ஓ-6)





கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் பதவி ஏற்பு வைபவம் அண்மையில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் உப மாவட்ட ஆளுநர் பிரியந்தா பெர்ணான்டோ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் லயன்ஸ் கழக புதிய தலைவராக பதவி ஏற்ற கெ.காண்டீபன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் மாவட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா மற்றும் உறுப்பினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

சாத்தான் நுழைய முடியாத இடத்திற்கு மதுவை அனுப்பி வைக்கிறான்.

– யூதப் பழமொழி

வலம்புரி

## யாழ்ப்பாணத்தின் அபாயமான எதிர்காலம் மாநாடு கூடி ஆராய வேண்டும்

யாழ்.குடாநாட்டின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்ற கேள்விக்கான விடைகள் ஆரோக்கியமானதாக தெரியவில்லை.

கடந்த காலங்களில் அமிழ்ந்து அல்லது அடங்கியிருந்த அட்டகாசங்கள் மீண்டும் தலைதூக்கும் அறிகுறிகள் இருக்கவே செய்கின்றன.

எனவே இது விடயத்தில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் யாவை என்பது குறித்து மாபெரும் மாநாடு நடத்தினாலும் அது தகுமெனலாம்.

எனினும் மாநாடு கூடி தண்டனை வழங்குங்கள், சிறையில் அடையுங்கள் என யாரேனும் கூறுவார்களாயின் அது மிகப்பெரும் தவறாக இருக்கும்.

ஏனெனில் தண்டனை வழங்குதல் அல்லது சிறைக்கு அனுப்புதல் என்ற இரண்டு விடயங்களும் தோல்வியில் முடிந்துள்ளன என்பதே எமக்கு வரலாறு உணர்த்தும் பாடமாகும்.

இது தொடர்பில் வடக்குக் கிழக்கு மாகாணத்தை ஆய்வுப் பரப்பாக எடுத்துக் கொண்டால், குற்றச் செயல்கள் மற்றும், சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடுதல் என்பதற்காக வழங்கப்பட்ட 'இனந்தெரியாத' மரண தண்டனைகள் ஆயிரக்கணக்கானவை.

களவு, கொள்ளை, கொலை, பாலியல் இம்சை, நம்பிக்கைத் துரோகம் என்ற மிகப்பெரிய பட்டியல் தயாரிக்கப்பட்டு அதுவே மரண தண்டனை பட்டியலாகிய சம்பவங்களும் உண்டு.

அதிலும் குறிப்பாக காலத்திற்கு காலம் சண்டித்தனத்தின் பேரால் உருவாகிய குறூப் (Group) கலாசார ஒழிப்பில் உயிரிழந்த இளைஞர்கள் பலர்.

இதற்காக இன்னமும் கண்ணீர்விடும் பெற்றோர்களின் பரிதாபமும் தொடரவே செய்கிறது.

நிலைமை இதுவாக இருக்கும்போது மரண தண்டனைகள் கூட நம் சமுதாயத்தை சீர்படுத்தவில்லை என்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

எனவே எங்கள் சமுதாயத்தில், கடலில் மிதக்கும் பனிக்கட்டிபோல் இருக்கக் கூடிய 'குறூப்' கலாசாரத்தை இல்லாதொழிப்பதில் எடுக்கக்கூடிய ஆரோக்கியமான நடவடிக்கைகள் குறித்து நாம் காத்திரமான தீர்மானங்களை எடுத்தாக வேண்டும்.

இதற்கான முதல் நடவடிக்கை யாழ்.குடாநாட்டில் இருக்கக் கூடிய கசிப்பு உற்பத்திகளையும், விற்பனைகளையும் அடியோடு அழித்தொழிப்பதுடன் அந்த உற்பத்திகளில் ஈடுபட்டவர்களின் சீவனோபாயம் தொடர்பில், சுயதொழில் முயற்சிகள் நோக்கிய திசை திரும்பலையும் செய்தாகவேண்டும்.

கசிப்பு உற்பத்திகள் ஒழிக்கப்படுவதனூடாக ஐம்பது வீதமான குற்றச்செயல்களை இல்லாதொழிக்க முடியும்.

# இலங்கையில் மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்த அரசு ஆலோசனை

## நீதி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மரணதண்டனை தீர்ப்பை அமுல்படுத்துவது சர்வதேச மற்றும் சட்ட ரீதியில் விவாதிக்கப்பட வேண்டிய விடயமாகும் . என்றாலும் மரணதண்டனையை இலங்கையில் மீண்டும் அமுல் படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று நீதியமைச்சின் செயலாளர் சுகத கம்லத் தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் மரண தண்டனையை இலங்கையில் அமுல்படுத்துவது தொடர்பில் நீதியமைச்சர். ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மர்னத்தை எட்டுவார் என்றும் அவர் கூறினார். நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கேட்போர்கூடத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து கருந்து தெரிவிக்கையில் ,

பொலிஸாருக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மரண தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 200கைதி கள் சிறைச்சாலைகளில் இருக்கின்றனர். மரண தண்டனையை நிறைவேற்றிக் கொள்வதில் சமூக மற்றும் சட்டப் பிரச்சினை இருக்கின்றது. இவை சர்வதேச மற்றும் சட்ட ரீதியில் விவாதிக்கப்படவேண்டிய விடயங்களாகும். மரணதண்டனையை அமுல்படுத்துவதன் ஊடாக குற்றச்செயல்களை கட்டுப்படுத்தலாம்என்றும் கட்டுப்படுத்த முடியாது என்ற விவாதங்களும் முன்வைக்கப் படுகின்றன., எனினும், மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என்பதில்நீதியமைச்சு கூடுதலான அக்கறை செலுத்தி வருக்கின்றது.

ஜனாதிபதி எகிப்திலிருந்து நாடுதிரும்பி யதும் இது தொடர்பில் இறுதித்தீர்மானம் எட்டப்படும். நீதிமன்ற நடவடிக்கைகளில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதனால் நாடளாவிய ரீதியில் மாவட்ட மாகாணமற்றும்மேல் நீதிமன்றங்கள் அடங்கலாக 60 நீதிமன்றங்களை நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன இதுதொடர்பில் அமைச்சரவையிலும் ஆராயப்பட்டுள்ளது.

வழக்கொன்றை விசாரணை செய்யும் போது அதற்கு காலவரை யறை யொன்றை வகுக்கவேண்டும் அந்த. முறைமை இலங்கையில் இல்லை என்பதனாலும் வழக்குகளை விசாரித்து தீர்ப்புகளை வழங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது. வழக்கை விசாரணைக்கு உட்படுத்தும் போது கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும்தெரிவித்துள்ளார். (ஓ-6)

## இலங்கை படையினரின் வீடமைப்பு திட்டத்துக்கு சீனா நிதி உதவி

(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கான வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு சீன அரசாங்கம் இலங்கைக்கு நிதியுதவி அளித்துள்ளது. இந்த திட்டத்திற்காக சீன அரசாங்கத்தினால் 120 பில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீன அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் இலங்கைப் படையினருக்கு சுமார் ஒரு இலட்சத்து 35 வீடுகள் நிர்மானிக்கப் படவுள்ளன. (ஓ-6)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப்பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11 வரை கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணித வாண்மை விருத்தி செயலமர்வு நாளை சனிக்கிழமை தொடக்கம் 21ஆம் திகதி வரை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

18 ,19ஆம் திகதிகளில் தரம் 6 தொடக்கம் 11 வரையான ஆசிரியர்களும் 20, 21ஆம் திகதிகளில் தரம் 9 -11 வரை கற்பிக்கும் ஆசிரியர்களும் சமூகம் கொடுக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் மதிய உணவு, கணிதபாடப்புத்தகங்கள் (6-11 வரை), முன்பு வழங்கப்பட்ட சுய கற்றல் கையேடுகள் தரம் 6,9, 11 க்கு இது வரை நடைபெற்ற கணித பாட மதிப்பீட்டுப் புள்ளிகள் ஆகியவற்றை எடுத்து வரும்படி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## விடுதலைப் புலிகளுக்கு உதவியதாககூறி சேருவில பகுதியில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை மீள ஒருங்கிணைக்க முயற்சி மேற்கொண்டதாக குற்றம் சுமத்தி தமிழர் ஒருவரை சேருவில மாவடிச் சேனைப்பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழீழ பாடல் ஒன்றை தயாரித்து மற்றவர்களின் கையடக்க தொலைபேசிகளுக்கு பகிர்ந்து தமிழீழ பிரசாரத்தை மேற்கொண்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்கள் கிடைத்த வேளையில் குறித்த இளைஞரை கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைதான இளைஞரிடம் இருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்றும், கணனி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட இளைஞன் இசைப் பணியில் ஈடுபட்டு வந்த ஒருவர் என பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

### இன்று மாவைக் கந்தன் ஆலய கார்த்திகைத் திருவிழா

**"கார்த்திகை தீப ஒளியினிலே கலக்கமெல்லாம் களைந்திடுவாய்"**

ஆதிமாவை கந்தனே அனைத்துயிரும் காத்திடுவாய்
அம்பிகையின் மைந்தனே ஆண்டருள வேண்டுமையா
மாமுகத்தை நீக்கியவா மாருதப்புரவீகவல்லி
போற்றிடுவா
மனக்குறையை நீக்கிடுவாய் மாயவனின் மருகனே
கார்த்திகை தீப ஒளியினிலே கலக்கமெலாம்
களைந்திடுவாய்
களிப்புடனே வலம் வந்திடுவாய் பண்ணிசையில்
மகிழ்ந்திடுவாய்
வாடிவரும் தொண்டருக்கு மலரடித்தேன் வழங்கிடுவாய்

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

## வெள்ளி நற்சிந்தனை 80

# பக்தியின் மொழி தமிழ்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**


இயற்கை அழகைக் கண்டு ரசிப்பதற்கு ஒரு கலை உள்ளம் தேவை. தன்னைச் சூழவுள்ளவற்றைக் கூர்ந்து நோக் கும் குணமுடையோர் சிலரே உளர். இறைவன் படைப்பைக் கண்டு வியப்படையும் பக்திப்பரவசம் ஒரு பயிற்சி நிலையாகும். அந்நிலையை எய்தியவர் கண்களில் காண்பன வெல்லாம் மனித இயல்புடன் தெரியும். இத்தகைய உணர்வைச் சுந்தரரது பாடல்களிலே தெளிவாகக் காணமுடியும். அவர் பார்வை சிவன் உறையும் சீபர்பதமலையில் உள்ள காட்சிகளிலே புதுமையைக் காண்கிறது.

தினைப்புனத்தைக் காவல் செய்யும் இளம் பெண்ணின் செயற்பாட்டில் கூர்மையாகப் பார்வையைப் பதிக்கின்றார். முற்றி விளைந்த தினைக்கதிரைக் கவர்ந்து செல்லவெனப் பறந்து வரும் கிளியைக் கண்டவுடன் காவற்பணியல் நிற்கும் கன்னிக்குக் கடுங்கோபம் வருகிறது. தினைக்கதிரை வாயினாலே வளைத்துக் கொய்கின்ற கிளி தன்னை மதிக்கவில்லையே என்று எண்ணுகிறாள். உடனே தன்னுடைய கையிலிருந்த கவணால் ஒலியெழுப்புகிறாள். அந்த ஒலியைக் கேட்ட தென்னைமரப் பொந்திலே வாழும் இயல்புடைய கன்னிக் கிளி தென்னை மரத்தை நோக்கி வேகமாகப் பறந்து போகிறது.

கிளியும் இளமையான பருவத்தில் நிற்கிறது. அதனால் சுந்தரர் கிளியைக் கன்னிக்கிளி என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார். அதைப் போலத் திணைப்புனக் காவலுக்கு நிற்கும் பெண்ணும் இளம்பருவத்தினளாக இருக்கின்றாள். இருவர் செயற் பாட்டிலும் இளமையின் வேகமும் துடுக்கும் காணப்படுகின்றது. இளம் பெண், பறவையான கிளி தன்னை மதிக்க வேண்டும் என்று நினைக்கிறாள். ஆனால் கிளியோ தன்னுடைய இளமையின் துணிச்சலாலும் திறமையாலும் செயற்படுகிறது. இந்த இளமையின் முரண்பாடு பக்தி நெறிக்குத் தடையானது. பிறரை மதிக்கும் பணிவு எல்லோருக்கும் இருக்க வேண்டும். பிறர் பொருளைக் கவர்ந்து அனுபவிக்க எண்ணும் செயற்பாடு மிகத்தவறானது.

இன்றைய உலகில் இளமைக்கு வழிகாட்டல் இன்றியமையாதது. உடல் வலுவைப் பயன்படுத்திப் பிறர் உழைப்பைக் கவரும் செயற்பாடு களையப்பட வேண்டியது. நீண்ட கால முயற்சியால் பெற்ற விளை பொருளை உரியவரிடமிருந்து பறிப்பது தகாது. மலைப்பகுதியில் வாழும் உயிரினங்களின் வாழ்வியலிலும் ஓர் ஒழுங்கு தேவை. அதனைப் பக்தி நெறியால் பெறமுடியும். தினையைக் கவர வரும் தென்னங்கிளியைக் கன்னிப்பெண் கவண் ஒலியால் விரட்டும் செயற்பாடு பெண்மையின் பரிவான வழிகாட்டலாக அமைந்துள்ளது. பெண்ணின் இயல்பான தாய்மை நிலையான வழிகாட்டலைச் சுந்தரர் தனது பாடலில் சிறப்பாகக் காட்டியுள்ளார்.

"மன்னிப் புனங்காவல் மட மொழியாள் புனங்காக்கக்
கன்னிக்கிளி வந்து கவைக் கோலிக் கதிர் கொய்ய
என்னைக் கிளி மதியா தென்று எடுத்துக் கவண் ஒலிப்பத்
தென்னக்கிளி திரிந்து ஏறிய சீபர்பத மலையே"

சுதுமலை வடக்கு ஈஞ்சடி

அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத

ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான தேர்த் திருவிழா

# சிறப்பு மலர் -17.07.2009

## ஆலய பிரதமகுருவின் ஆசியுரை



யாழ்ப்பாண நன் நகரில் சுதுமலை எனும் கிராமத்தில் ஈஞ்சடிப் பதியிலே முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அடியார்களுக்கு இடையூறுகள் ஏற்படாமல் சகல அனுக்கிரகத்தையும் அள்ளி வழங்கி வரும் சாமுண்டாம்பிகா சமேத வைரவப் பெருமானின் தேர்த் திருவிழா இதுவாகும்.

தெட்சணா ஜன புண்ணியகாலத்தில் வருடந்தோறும் தேர்த்திருவிழா நடைபெற்று வருகின்றது. அன்றைய தினம் அடியார்கள் எம்பெருமானை தரிசித்து எல்லாச் செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ அருள வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ஆலய தர்மகர்த்தா சபையினரின் பெருமுயற்சியினால் உபயகாரர்களின் முயற்சிகளோடும் திருவிழா நிகழும் 12 நாட்களும் அன்னதானம் நடைபெற்று வருகின்றது.

இவையெல்லாம் ஈஞ்சடி வைரவப் பெருமானின் திருவருள் என்று கூறி எம்பெருமானின் திருவருள் சகல மக்களுக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.


ந. உருத்திரமூர்த்திக்குருக்கள்
உற்சவ கால பிரதம குரு,
ஈஞ்சடி சுதுமலை.

## தர்மகர்த்தா சபைத் தலைவரின் ஆசியுரை



சுதுமலைக்கிராமத்தில் ஈஞ்சடிப் பதியினில் அழகுற வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் புரிகின்ற வைரவப் பெருமானது தேர்த் திருவிழாவானது தெட்சணாயன புண்ணிய காலத்திலே வருடம் தோறும் இடம்பெற்று வருகின்றது. ஈஞ்சடி வைரவப் பெருமானின் அருள் சகல மக்களுக்கும் கிடைக்க வேண்டும். தேர்த் திருவிழாவிலே சகல மக்களும் கலந்து எம்பெருமானின் பேரருளினை பெறுவீர்களாக.

கா.திருநாவுக்கரசு
தர்மகர்த்தா சபைத் தலைவர்,
சுதுமலை ஈஞ்சடி வைரவர் திருக்கோவில்.



## எம்மவர் துயர் துடைக்க தேர் ஏறி வருகின்றான் ஈஞ்சடியான்

ஈழத் திருநாட்டில் மட்டுமன்றி வேறு எங்கேயும் காண முடியாத அற்புதப் பொலிவோடு இன்று எம்மவர் துயர் துடைக்க தேரேறி வருகின்றான் சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவன்.

இற்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன்பு பல்லாயிரக் கணக்கான ஆடு,கோழிகளைப் பலிகொண்ட வைரவன் இன்று ஞான மூர்த்தியாக பல பரிவாரத் தெய்வங்களைத் தன்னகத்தே கொண்டு எமது மக்களைப் பரிபாலனம் செய்கின்ற காவல் தெய்வமாக, எமது கிராமத்துக்கு அருள் பாலிக்கின்ற பெருமானின் தேர் வடம் பிடிக்க அடியார்கள் பல திசைகளிலும் இருந்து வந்துள்ளார்கள்.

வைரவர் ஆலயத்தில் தேர் ஓடும் நிகழ்வு இவ்வாலயத்தில் வருடாவருடம் சிறப்பாக நடைபெறுகின்றது மட்டுமன்றி முக்கியத்துவம் வாய்ந்ததுவுமாகும். நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெறுவதுடன் ஆடிப்பிறப்பன்று தேர்பவனி வரும் நிகழ்வு அன்று தொட்டு இன்றுவரை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

வைரவர் ஆலயத்தில் கொடி ஏற்றல் நிகழ்வு நடைபெறுவதில்லை. எமது ஆகமத்தில் அதற்குரிய விதி இல்லை. எனினும் மற்ற எல்லா நிகழ்வுகளும் ஆகம விதிப்படி நடைபெறுகின்றன. இவ் ஆலயத்தின் குரு வேதசிவாகம கிரியாபானு சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் சிறப்பாக செய்கின்றார். தர்மகர்த்தா சபையின் சிறந்த பணியும் போற்றத்தக்கது.

தஞ்சமென வருவோருக்கு காவலனான வைரவன் விளங்குகின்றான். போர்ச்சூழல் காலங்களிலும் இந்திய இராணுவக் காலங்களிலும் இவ்வாலயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இம்மக்களை மட்டுமன்றி இக் கிராமத்திற்கு எவ்வித பாதிப்புகளும் இன்றி வைரவர் காத்து வருகின்றார்.

இத்தகைய பெருமை வாய்ந்த பெருமானின்

"தேர் வடம் பிடிக்க
ஊர் கூடி வாருங்கள்"
"ஞான வயிரவன் றாள் மலர் பணிய
ஆனகிரக மொன்பது மன்பொடு பலன் தருமே"
*"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"*

ச.தம்பித்துரை J.P

## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை



எங்கள் திருநாட்டிலுள்ள வைரவர் ஆலயங்களில் பழமையும் புதுமையும் நிறைந்த ஆலயமாக சுதுமலை ஈஞ்சடி வைரவர் ஆலயம் விளங்குகிறது.

கிராமிய வழிபாட்டின் மேன்மையை விளக்கும் காவல் தெய்வமாக பல ஊர்மக்களும் போற்றி வழிபாடு செய்வதை யான் அறிவேன்.

இத்திருக்கோவில் சூழலில் நல்லை நகர் நாவலர் பெருமானுக்கு திருவுருவச் சிலை வைக்கப்பட்டு ஆன்மிகக் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பாராட்டுக்குரியது.

ஈஞ்சடி வைரவர் ஆலயத்தில் பல்வேறு திருப்பணிகள் ஆண்டு தோறும் நடைபெற்று பெருங்கோவிலாக இன்று காட்சி தருவது பெருமைக்குரிய விடயமாகும்.

வைரவர் பெருமானின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துவதோடு எம் மண்ணில் அகதி முகாம்களில் அல்லற்படும் மக்களுக்கு ஆறுதல் கிடைக்க ஈஞ்சடியான் நல்லருள் பாலிக்க வேண்டி அனைவரும் துன்புறும் மக்களுக்காகப் பிரார்த்தித்து எல்லோரும் இன்புற்று வாழ இறைஞ்சுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

ஆறு.திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## தேர்த்திருவிழா நிகழ்ச்சி நிரல்

காலம்: 17.07.2009 ஆடித் திங்கள் 1ஆம் நாள் வெள்ளிக்கிழமை
அபிஷேகம்: மு.ப 8.00 மணி
வசந்த மண்டபப் பூசை: மு.ப 10.15 மணி
தேரில் ஆரோகணித்தல்: நண்பகல் 12.15 மணி
பச்சை சாத்துதல்: பி.ப 2.00 மணி
உற்சவ குரு: சிவஸ்ரீ. ந. உருத்திரமூர்த்திக் குருக்கள்

தேர் உற்சவத்தின் போது அடியார்கள் வருகை தந்து ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானின் திருவருளைப் பெறும் வண்ணம் வேண்டுகின் றோம்.

தர்மகர்த்தா சபையும்
தேர்த்திருவிழா உபயகாரரும்

மலர் அமைப்பு :
V.கிரிதரன்
மானிப்பாய்.

## விழா சிறப்புற வாழ்த்துவோர்


செல்வரா ஜாமினி நகைப்பூங்கா
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
ஈஸ்வரன் பேக்கரி
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

ஸ்ரீ சுபா பேக்கரி
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
அம்பாள் அரைக்கும் ஆலை
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

சுந்தர் கேபிள் T.V
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம்
இணுவில்.

அபிராமி சவுண்ஸ்
தொடர்புகொள்ள :
அம்பாள் ஸ்ரோஸ் சுதுமலை.
பாடசாலை வீதி, இளவாலை.
பாடசாலை வீதி, சுண்டுக்குளி.

ஸ்ரீ குமரன் ஹாட்வெயர்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

ஈஞ்சடி ஸ்ரீ வைரவர் தர்மகர்த்தா சபையினர்

சிவதனகுமரன் அரிசி ஆலை
இணுவில் கிழக்கு, இணுவில்.

# ஸ்ரொரஸ் சதம் இங்கிலாந்து பலம்



(லோட்ஸ்)

அணித்தலைவர் ஸ்ரொரஸின் சிறப்பான சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 364 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் ஆஷஸ் தொடர் என வர்ணிக்கப்படும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடை பெற்று வருகின்றது இதில் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இந் நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று லோட்ஸில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஸ்ரொரஸின் சிறப்பான சதத்தின் மூலம் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 364 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் அன்ரூ ரொரஸ் ஆட்டமிழக்காமல் 161 ஓட்டங்களையும் குக் 95 ஓட்டங்களையும் பீற்றர்சன் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில்ஹில்பென்ஹயூஸ், ஜோன்ஸன் ஆகியோர்தலா இரண்டு விக்கெட்டுக்களை யும் சிடில், மைக்கெல் கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இங்கிலாந்து சகலதுறை வீரர் பிளின்டொப் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு

## தொடரும் காயத்தால் முடிவு



(லண்டன்)

அடிக்கடி காயத்தால் அவதிப்பட்டு வரும் இங்கிலாந்து வீரர் பிளின்டொப் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற உள்ளார்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை நட்சத்திர வீரர் அன்ரூ பிளின்டொப்; இங்கிலாந்து அணி கடந்த 2005ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரைக் கைப்பற்ற முக்கிய காரண மாகத்திகழ்ந்தார்.

சமீப காலமாக காயத்தால் அவதிப்பட்டு வந்த பிளின்டொப் அடிக்கடி அணியிலிருந்து நீக்கப் பட்டார். தற்போது சொந்த மண்ணில் ஆஷஸ் தொடரில் விளையாடி வரும் பிளின்டொப் காா்ட்டிப்பில் நடந்த முதல் டெஸ்டில் பங்கேற் றார்.

இருப்பினும் மீண்டும் முழங்கால் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். எஞ்சியுள்ள நான்கு போட்டிகளில் இவர் பங்கேற்பது கேள்விக் குறியாகியுள்ளது.

இந்நிலையில் ஆஷஸ் தொடருக்குப்பின் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக நேற்று முன்தினம் திடீரென அறிவித்துள்ளார் பிளின்பொப். இருப்பினும் ஒரு நாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் தொடர்ந்து பங்கேற் பதாகவும் அறிவித்துள்ளார்.

இது குறித்து பிளின்பொப் கூறியதாவது;

கடந்த 2005ஆம் ஆண்டுக்குப்பின் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் காயத்தால் அவதிப்பட்டேன். அந்தகாலக்கட்டத்தில் கிரிக்கெட் அரங்கில் பெரிய அளவில் எதுவும் சாதிக்கவில்லை. அதற்குப்பின்னும் காயம் என்னை துரத்தியது.

இதுவரை கணுக்காலில் நான்கு முறை சத்திரசிகிச்சை செய்து கொண்டுள்ளேன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் முழங்காலில் சத்திரசிகிச்சை செய்தேன்.

தற்போது மீண்டும் ஏற்பட்டுள்ள முழங்கால் காயம் விரைவில் முடிவெடுக்க முக்கிய காரணமாக அமைந்து விட்டது.

டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற இது வே சரியான நேரம் என கருதுகிறேன். ஓய்வு பெற உள்ள நிலையில் ஆஷஸ் தொடரை இங்கிலாந்து கைப்பற்ற வேண்டும் என நினைக்கிறேன். எஞ்சியுள்ள ஆஷஸ் தொடரின் நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் எனது சிறப்பான செயல் பாட்டை வெளிப்படுத்த காத்திருக்கிறேன். இவ்வாறு பிளின்டொப் கூறினார்.

**நட்சத்திர வீரர்**

இங்கிலாந்து அணியின் சிறந்த சகலதுறை வீரராக வலம் வந்தார் பிளின்டொப். இதுவரை விளையாடிய 76 டெஸ்ட் போட்டி களில் 5 சதம், 25 அரைச்சதம் உட்பட 3708 ஓட்டங்களை குவித்துள்ளார். தவிர 219 விக்கெட்டுக்களை யும் வீழ்த்தியுள்ளார்.

போராட்டக் குணத்துடன் போட்டிகளில் பங்கேற்றார் பிளின்டொப். கடந்த 2002ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இங்கிலாந்து மோதியது. மும்பையில் நடந்த ஒரு போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற ஆக்ரோஷத்தை வெளிப்படுத்திய பிளின்டொப் தனது சட்டையைக் கழற்றி சுழற்றினார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அதே ஆண்டு இந்திய அணி லோர்ட்சில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றது. அப்போது இந்திய அணித்தலைவர் கங்குலி தனது சட்டையை கழற்றி சுழற்றினார்.

கடந்த 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளில் நடந்த உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் மது அருந்திச்சிக்கலில்மாட்டினார்பிளின்டொப்.

இதன் காரணமாக துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். கடந்த 2005ஆம் ஆண்டுஐ.சி.சி. வழங்கிய சிறந்த டெஸ்ட் வீரர் விருதை பிளின்டொப் வென்றார்.




## மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்களுக்கு இறுதி எச்சரிக்கை

(கிங்ஸ்டன்)

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள் உடனடியாக மன்னிப்பு கேட்கவேண்டும் அல்லது அதற்கான விளைவுகளை சந்திக்க நேரிடும் என மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை (டபிள்யு.ஐ.சி.பி.) எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள் தங்களது சம்பள ஒப்பந்த பிரச்சினைக்கு தீர்வு காணும்படி நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். இதற்கு முன்பு நடந்த இந்தியாவுக்கு எதிரான தொடர் இருபது-20 உலககோப்பை உட்பட பல தொடர்களில் இது நீடித்தது.

சமீபத்தில் வீரர்கள் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபையுடன் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதையடுத்து பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரை கிறிஸ் ஹயில், சந்தர்போல், சர்வான் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் புறக்கணித்தனர்.

இதையடுத்து இரண்டாம் நிலை வீரர்களுடன் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் டெஸ்டில் தோல்வியடைந்தது.

இதையடுத்து டபிள்யு.ஐ.சி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில்;

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வீரர்கள் உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லை என்றால் அதற்கான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

தவிர வரும் செப்டம்பரில் தென்னாபிரிக்காவில் நடக்க இருக்கும் சம்பியன்ஸ் தொடருக்கு இந்த வீரர்கள் தேர்வு செய்யப்பட மாட்டார்கள் என தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த விடயத்தில் வீரர்கள் மன்னிப்பு கேட்க மாட்டார்கள் என வீரர்கள் சங்கத்தின் முதன்மை தலைவர் ராம் நரைன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 2008 ஆம் ஆண்டு தகுதி பெற்ற முள்ளியவளையில் வசித்த சிவபாதம் பிரசாத் (வயது 22) என்ற இந்த இளைஞன் ஷெல் தாக்குதலுக்கு உட்பட்டு தமது இரு கால்களையும் இழந்துள்ளார். இவர் தற்போது மன்னார் அரச வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார். அவரை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் அரவிந்தன் ஆகியோர் பார்வையிடுகின்றனர்.

# நடமாடும் சேவை

நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் சுனா மியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப் புவதற்கான செயற்றிட்டத்தினால் நல்லூர் பிரதேசத்திற்கான நடமாடும் சேவை இன்று நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்திலும், யாழ் பிரதேசத்திற் கான நடமாடும் சேவை நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியிலும் நடத்தப்படவுள்ளது. இந் நடமாடும் சேவையில் நீதி அமைச்சின் செயலாளர் கே.கமலத், ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளர் ஏ.ஜி. தர்மதாஸ, பதிவாளர் திணைக்கள பதிவாளர் நாயகம் மற்றும் உதவிப் பதிவாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்டு சேவைகளை வழங்கவுள்ளனர். நடமாடும் சேவையில் விசேடமாக சட்ட ரீதியான ஆவணங்களான பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்களையும், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. (ச-3)

# வீதியின் அபிவிருத்திப்...

விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாக புறப்பட்ட அமைச்சர் முகமாலை, பளை, இயக்கச்சி, ஆனையிறவு, கிளிநொச்சி, முறிகண்டி மற்றும் மாங்குளம் போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மற்றும் சிரமதானப்பணிகளை பார்வையிட்டதுடன் அங்குள்ள படைத்தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொண்டு நிலைமைகளை கேட்டறிந்து உடனடியாக முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதேவேளை கிளிநொச்சி நகரில் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அங்கு மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வவுனியாவிலிருந்து முறிகண்டி பிரதேசம் வரை புதிதாக மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின் கம்பிகள் மற்றும் மின் மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளதையும் காண்பித்த அபிவிருத்திப் பணியாளர்கள் இதன் மூலம் விரைவில் கிளிநொச்சி நகருக்கு மின் இணைப்பு கிடைக்கப்பெறும் என்பதையும் அதனூடாக ஏனைய புனர் நிர்மாண பணிகளை துரிதமாக மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் வடபகுதிக்கான ரயில் சேவையை முன்னெடுப்பதற்காக புளியங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் ரயில் பாதையை புனரமைக்கும் பணிகளையும் மற்றும் திருத்த வேலைகளையும் இந்த விஜயத்தின் போது அமைச்சர் நேரில் பார்வையிட்டு விபரங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு விசேட பூசை வழிபாட்டிலும் கலந்து கொண்டதுடன் அந்த ஆலயத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் கவனம் செலுத்தியதுடன் அமைச்சு அதிகாரிகளுடனும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனும் கலந்துரையாடினார். (ச-5)

# வடக்கில் இடம்பெயர்ந்த...

இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

உலகில் மிகவும் சக்திமிக்கதாய் விளங்கிய பயங்கரவாத அமைப்பொன்றை முற்றாக அழிப்பதற்கு எமது நாட்டால் முடிந்துள்ளதை பெருமையுடன் முதலில் நினைவு கூறிக் கொள்கிறேன். அது எவ்வகையிலும் விடுதலை அமைப்பொன்றல்ல. வன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு தேச விரோத சக்தியில் தீவிரமாய் செயல்பட்ட ஒரு பிரிவினை வாத அமைப்பாகும்.

இவ்வாறான அதி பயங்கரவாதப் பிரிவினைவாத அமைப்புக்காக சில நாடுகள் குரல் கொடுக்க முனைந்திருப்பது கவலைக்குரிய விடயமாகும். இந்த நாடுகளுக்கு பயங்கரவாதம் சவாலாக இல்லை என்பதையே இது குறிக்கின்றது.

பயங்கரவாதத்தை நாம் எதிர்கொண்ட போது எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அணிசேரா நாடுகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயங்கரவாதம் எவ்வாறான தரத்திலிருந்தாலும் இலங்கை அதனை முற்றாக எதிர்க்கும். எமது நாட்டில் பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள் மிக முக்கியமானதாகும். அவர்களின் நன்மை கருதி எங்களுக்கு உதவிகளை வழங்கிய சர்வதேச சமூகத்திற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறிய அமைப்பான சார்க் அமைப்புக்கே தலைமைச் செயலகம் ஒன்று உள்ள வேளையில் 50 வருடங்கள் பழமைவாய்ந்த அமைப்பான அணிசேரா அமைப்புக்கு நிரந்தர செயலகம் ஒன்றை அமைக்க முடியாமல் போயுள்ளது.

எனவே இதனைக் கருத்தில்கொண்டு இந்த அமைப்புக்கான நிரந்தர செயலகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைக்கிறேன் என ஜனாதிபதி மேலும்தெரிவித்தார். (ச-5)

## முகாம் தொடர்பான...

களை மேற்கொள்வதில்லை எனவும் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

எனினும் மௌனித்த காலங்கள் போதும் எனவும் தற்போது தமிழ் மக்களின் நடமாட்ட சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் நீண்ட நாட்களாக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டு விட்டதாக அறிவித்து 2 மாதங்களை கடந்த நிலையிலும் இன்னும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும் அதிகரித்த இராணுவத் துருப்பினரின் பாதுகாப்பினால், அவர்களின் நடமாட்ட சுதந்திரம் முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களை முகாம்களில் இருந்து வெளியேற விடாத அதேவேளை மனிதாபிமான நடவடிக்கைக் குழுக்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் முகாம்களுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அரசாங்கம் நிலக் கண்ணிவெடிகளை அகற்றியதன் பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த்தப்படுவர் என தெரிவித்து வருகிறது.

எனினும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது என ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (ச-5)

## பயங்கரவாதம்...

முன்னணியில் இணைந்து கொண்ட மொனராகலை மாவட்ட ஐ.தே.கட்சியின் லக்வுனிதா அமைப்பின் தலைவியான யசவந்தி மற்றும் ஊவா மாகாண சபைக்கான ஐ.ம.சு. முன்னணியின் முதலமைச்சர் வேட்பாளரான சசிந்திர ராஜபக்ஷ ஆகியோரும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)




324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
www.mcsitcampus.com
MCS Supported By UNDP/JRRP


# வட மாகாண விளையாட்டுப்போட்டி
# யாழ்.மாவட்ட பாடசாலை வீரர்கள் நேற்று மட்டும் 28 தங்கம் வென்றனர்

(முருங்கன்)

வடக்கு மாகாண தடகளப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற போட்டிகளில் யாழ்.பாடசாலைகளின் வீர வீராங்கனைகள் 28தங்கம், 20 வெள்ளி மற்றும் 9 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர். வடக்கு மாகாண பாடசாலைமட்ட 2009 ஆண்டுக்கான தடகளப் போட்டிகள் மன்னார் முருங்கன் விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற போட்டிகளில் முறையே தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**75 மீற்றர் ஓட்டம்:** *11 வயதிற்குட்பட்ட ஆண்கள்;*
பி.கமிஸ்ரர்–இளவாலை சென்.ஹென்றிக்ஸ் கல்லூரி,ஆர்.விதுஷன் –சூரியக்கட்டை ம.வி, ஏ.கே. குரூஸ்–மன்னார் ஆன்ஸ் ம.வி.

**மும்பாய்ச்சல்:** *17 வயதிற்குட்பட்ட பெண்கள்;*
எஸ்.ஜெயரஞ்சினி–சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, ஆர்.ஜக்சனா–அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

**நீளம்பாய்தல்:** *21 வயதிற்குட்பட்ட ஆண்கள்;*
எம்.கோகிலதாஸ்–தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி,எம்.தயாபரன்–தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, அருள் நிசாந்தன்–மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி.

**மும்பாய்ச்சல்:** *17 வயதிற்குட்பட்ட ஆண்கள்;*
வி.அகிலன் –அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, எம்.ரஜீகரன் –சுதந்திரபுரம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, எஸ்.கவிஜன் குரூஸ்–மன்னார் அரிப்பு ஆர்.ரி.ரி.எம்.எஸ்.

**200 மீற்றர் ஓட்டம்:** *15 வயதிற்குட்பட்ட ஆண்கள்;*
கே.விதுரன்–யாழ்.சென்.சாள்ஸ் ம.வி, ஆர்.கிருசாந்த் –சாவகச்சேரி இந்துக் கல்லூரி, என்.கரிகரன்– உயிலங்குளம் ஆர்.ரி.ரி.எம்.எஸ்.

**200 மீற்றர் ஓட்டம்:** *13 வயதிக்குட்பட்ட பெண்கள்;*
பி.ஜெயந்தினி–வவுனியா கணேஷ்வரா ம.வி. ஜெ.றிசிலுக் சாளினி–இளவாலை கன்னியர்மடம், எம்.சிந்துஜா–தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

**200 மீற்றர் ஓட்டம்:** *13வயதிக்குட்பட்ட ஆண்கள்;*
ருமேஷ்–மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி,பி.விதுஷன்–யாழ்.இந்துக் கல்லூரி, ஏ.எம். சிகால் –வவுனியா இக்பால் ம.வி.

**200 மீற்றர் ஓட்டம்:** *15 வயதிற்குட்பட்ட பெண்கள்;*
மாசிலேத்தா–நானாட்டான் ம.வி,எஸ்.டிலக்ஷனா– தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஆர்.தர்சிகா – கொக்குவில் இந்துக் கல்லூரி.

**உயரம் பாய்தல்:** *13வயதிற்குட்பட்ட பெண்கள்;*
ஏ.டெசிதா –மீசாலை வீரசிங்கம் ம.வி, எஸ்.எம். ஜெ. சேனநாயக்க –வவுனியா நெடுக்குளம் ஜி.ரி.எம்.எஸ், வி.விஜித்தினி–மன்னார் தோட்டவெளி ஜி.ரி.எம்.எஸ்.

**தட்டெறிதல்:** *15 வயதிற்குட்பட்ட ஆண்கள்;*
கே.ஆரூரன்–பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பி.தனேஸ்வரன் –யாழ்.மத்திய கல்லூரி, ஆர்.மடுகந்த– வவுனியா மடுகந்த தேசிய பாடசாலை.

**800 மீற்றர் ஓட்டம்:** *17 வயதிற்குட்பட்ட ஆண்கள்;*
எஸ்.அகிலராஜ்–கட்டுவன்புலம் ம.வி, ஜெ.சிறிலவன்– யாழ்.மத்திய கல்லூரி, எஸ்.கிளின்டன் –நானாட்டான் ம.வி.

**தட்டெறிதல்:** *15 வயதிற்குட்பட்ட பெண்கள்;*
எஸ்.சுகன்யா–பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி., ரி.விதுஷனா–உடுப்பிட்டி மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, மேரி. செமிஸ்ரா – மன்னார் தோட்டவெளி ஜி.ரி.எம்.எஸ்.

**200 மீற்றர் ஓட்டம்:** *17 வயதுக்குட்பட்ட ஆண்கள்;*
எட்வின் ஜோய்– யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி, ரி. தயாபரன் –கம்பர்மலை அ.த.க பாடசாலை, எ. அனோஜன் – மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி,

**800 மீற்றர் ஓட்டம்:** *21 வயதுக்குட்பட்ட ஆண்கள்*
எம்.தினேஸ் – அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, எம். பிரமதாஸ்– மன்னார் சென்சேவியர் ஆண்கள் கல்லூரி, எஸ்.ரூபினாத் – தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,

**200 மீற்றர் ஓட்டம்:** *17 வயதுக்குட்பட்ட பெண்கள்*
ஆர். ஜக்சனா– அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, எம்.லோகிதா – இறம்பைக்குளம் பெண்கள் ம.வி, எம்.தர்சிகா – மன்னார் சென்லூசியாஸ் ம.வி,

**75 மீற்றர் ஓட்டம்:** *11 வயதுக்குட்பட்ட பெண்கள்*
எஸ்.டிலாஜினி–. வவுனியா செக்கட்டி புலம் ஜி.ரி. எம்.எஸ் , எஸ் . தர்சிகா – வவுனியா இல் அக்பால் ம.வி, ஏ. அபிநயா – உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**800 மீற்றர் ஓட்டம்:** *21 வயதுக்குட்பட்ட பெண்கள்*
என். மேர்சி– மானிப்பாய் மகளிர் கல்லூரி, எஸ். எழிலரசி– வவுனியா இந்துக் கல்லூரி, எஸ் . திருமகள் – தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,

*(ஏனைய போட்டி முடிவுகள் நாளை வெளிவரும்)*

## வீரவன்ச–ஹெல உறுமய உள்ளவரை...

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் சகல மக்களும் சமவுரிமையுடன் வாழ்வதற்காக 13,17–வது திருத்தச் சட்டங்களை முழுமையாக அமுல்படுத்துமாறு அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தி வருகிறது.

எனினும் ஹெல உறுமயவும் விமல் வீரவன்ச அணியும் அரசுடன் இருக்கும் வரை 13–வது திருத்தச் சட்டம் அமுலுக்கு வரமாட்டாது.

ஜாதிக ஹெல உறுமயவும் விமல் வீரவன்ச அணியும் தமிழ் மக்களுக்கு சமவுரிமை வழங்க விடமாட்டார்கள். தற்போது அரச பயங்கரவாதமே உள்ளது. ஒரே நாட்டிற்குள் உள்ள தமிழ் மக்களில் அதிகூடியவர்கள் சொந்த இடங்களை இழந்து முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது வேதனை அளிக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி யாழ்.குடாநாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவே மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுகிறது. அத்துடன் கடந்த காலத்தில் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களித்துள்ளனர்.

இதனையே தொடர்ந்து செய்வார்கள் என்பது மறுப்பதற்கில்லை. ஐக்கியதேசியக் கட்சி மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையுள்ளது. யாழ்.மாநகர சபையின் ஆட்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி வந்தால் யாழ். நகரை நவீன மயப்படுத்தும் வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகும்.

மீன்பிடிக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்படும். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் சகல இன மக்களின் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் கட்சி.

ஐ.தே.க. அரசாங்கம் அமைத்தால் நாட்டின் சகல இன மக்களுக்கும் ஒரே தீர்வு வழங்கப்பட்டு அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவே விரும்புகிறோம். ஐ.தே.க. பயங்கரவாதத்திற்கு என்றுமே எதிரானது. இந்த அரசின் பொய்யான வாக்குறுதிகள் மக்களின் துன்பங்களைப் போக்காது.

நாட்டில் நீதி, நிர்வாகத்தை நிலைநாட்டி ஜனநாயகத்தை ஏற்படுத்தி சகல இன மக்களுக்கும் சமவுரிமை கிடைக்க எல்லாக் கட்சிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கிலுள்ள தமிழ் மக்களின் துன்பங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெரியும். சகல மக்களுக்கும் அடிப்படை உரிமைகளை வழங்குவது அரசாங்கத்தின் கடமை. வடக்கிலுள்ள மக்களின் வாழ்க்கை பயங்கரமாகவுள்ளதுடன் வாழ்க்கைச் செலவு கடுமையாகவுள்ளது.

வன்னி யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் முகாம்களிலுள்ள மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்தும்.

2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து ஏ–9 வீதியை திறந்தது. அப்போது வடக்கு மக்களுடன் இருந்த டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன அபிவிருத்திப் பணிகளை துரிதமாகச் செய்தார்.

இப்போதும் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவும் வடக்கு தமிழ் மக்களுடனேயே உள்ளார். அவர் வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறார்.

எனவே யாழ்.மாநகர சபையின் முதன்மை வேட்பாளர் ஏ.ஏ.எஸ்.சத்தியேந்திராவுக்கும் அவருடன் இணைந்து கேட்கும் 28 வேட்பாளர்களுக்கும் யாழ்.நகர மக்கள் வாக்களித்து வெற்றியடைய செய்ய வேண்டும் என்றார். (ச-5)


ஓம் சக்தி

சித்தன்கேணி
அருள்மிகு ஸ்ரீ நாககன்னி அம்மன் ஆலயம்

மெய்யடியார்களே!
அருள்மிகு ஸ்ரீ நாககன்னி அம்மன் ஆலயப் பூஜைகள், வழிபாடுகள் வழமைபோல் நடைபெறுகின்றது. அந்த வகையில் ஆடிப் பிறப்பு நாளாகிய இன்று மாத முதல் வெள்ளிக் கிழமை (17.07.2009) ஒரு மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூஜைகளுடன் இறைவி வீதியுலா வந்து அருள்பாலிப்பார் என்பதையும், அருள் வாக்குகள் வழங்கப்படும் என்பதை அடியார்க்கு அறியத் தருகின்றோம்.

✦ ஆடிப்பூர விழாவும் சிறப்பாய் நடைபெறும் என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

ஸ்ரீ அருள்மிகு நாககன்னியம்மன் சித்தன்கேணி
அறிவித்தல் ஞானகுரு இந்திரன் ஐயா பூசகர்.
(2969)

படிவங்கள் விற்பனையாகிறது
I. உப அஞ்சல் அதிபர்களுக்கான விண்ணப்பம்
II. புகையிரதத் திணைக்கள தொழில்நுட்பவியலாளர் வகுப்பு II
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்
(C-2826)

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT DIT⇨HDIT⇨BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது Closing Date 20.07.2009
A/L 2009 பரீட்சைக்கு தோற்றவுள்ள (கலை,வர்த்தக,விஞ்ஞான) மாணவர்களும், அரச, வங்கி ஊழியர்களும்,விண்ணப்பிக்கலாம்
- பரீட்சைகள் கொழும்பு பல்கலைக் கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படுகின்றன.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- விரிவுரைகள் யாவும், அனுபவம் வாய்ந்த கணனி விஞ்ஞான பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன.

Further More,MCS offers
** Computer Engineering to BIT students. You also achieve MCP & MCTS Professional membership from MICROSOFT *
**COMTIAA+,ICDL ( Computer Driving License)module totally free
**CISCO-CCNA Course fees free *E-learning facilities also available
கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும் நேரில் MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP

கிருபா லேணர்ஸ்
சாரதி பயிற்சிப் பாடசாலை

புதிய சாரதி அனுமதிப்பத்திரம் (சிமாட்காட்) குறிப்பிட்ட கால எல்லைக்குள் பெற்றுக் கொடுக்கப்படும். மற்றும் செய்முறை (ரெயல்) பரீட்சை எழுதுப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புகள் வழங்கப்படும். யாழ். மக்களிடம் அறிமுகமான பயிற்சியாளர்களால் பயிற்சியளிக்கப்படும்.
226, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: A.கிருபாகரன்
T.P- 0777225292/ 021 222 4353

(C-2824)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.